# திராவிடநாடு

மலர் 14 | விலை 2 அணா | இதழ் 7




# மக்கள் கரமும் மன்னன் சிரமும்



கிராம்வெல்.



சார்லஸ்.

**சி. என். அண்ணாதுரை**

இரு கொடுமையாளர்களைச் சிறைக்கூடத்துக்கு மாமன்றம் அனுப்பிய செய்தி, மக்கள் உள்ளத்திலே என்றுமில்லாத களிப்பை உண்டாக்கிற்று! நீதி வெல்கிறது! மக்கள் வெல்கிருர்கள்! மமதை அழிந்து படுகிறது! மாண்பு வெற்றி பெறுகிறது என்று மகிழ்ந்தனர். குட்டிக் கொடுமையாளர்களுக்கெல்லாம், குலைநடுக்கம். அரசை ஆட்டிப்படைத்த இருவர், சிறையிலே தள்ளப்பட்டனர், நமது கதி யாதோ என்று எண்ணினர், பயத்தால் பாதி உயிர் போயிற்று! பலர், வெளிநாடுகளுக்கு ஓடினர். சிலர், சரண் புகுந்தனர், சிலர், மன்னனைச் சுற்றி வட்டமிட்டனர்—மன்னனோ தன் ஆதிக்கம் 'மடியக் கண்டு, மனம் உடைந்துபோயிருந்தான்.

நெடுங்காலமாக ஏறிக்கொண்டு வந்த கறைகளை மாமன்றம் கழுவித் தள்ளலாயிற்று.

ஹாம்டனுக்கு விரோதமாகத்தீர்ப்பளித்த நீதிபதிகள், வேலையினின்றும் விரட்டப்பட்டனர்; மாமன்றம் திருப்பித் தாக்கத் தொடங்கியதும், தீயோர் திகில்கொண்டனர்.

உரிமைக்குரல் எழுப்பியதற்காகச் சிறையிலே தள்ளப்பட்டுக்கிடந்த இலட்சிய வாதிகள் விடுதலை செய்யப்பட்டனர்; நாடு, விழா கொண்டாடிற்று.

பர்ட்டன், பிரைன், லில்ப்ர்ன் ஆகியோர் விடுதலையை மக்கள் பெருந்திருவிழாவாகக் கொண்டாடினர்; இலண்டன் நகருக்கு அவர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்; பாதையில் மலர் தூவி மக்கள் அவர்களை வரவேற்றனர். கண்ணீர் துடைக்கப்படுகிறது! கடும்தண்டனை பெற்றவர்கள் விடுதலை பெறுகின்றனர்!

மக்கள் இயக்கத்தை நசுக்க முற்பட்டவர்கள், தெருவில் செல்ல அஞ்சுகிருர்கள். முச்சந்திகளிலெல்லாம் முழக்கமிடும் மக்கள் கூடி, இன்றைய விருந்து என்ன? இன்று யார் விடுதலை? இன்று எந்தக் கொடுமையாளனுக்குத் தண்டனை? இன்று மாமன்றம் எந்தப் பிரச்னை குறித்து முடிவெடுத்தது? என்று கேட்கின்றனர். அரசியல் பிரச்னை தவிரப் பிறிதொன்றிலும் மக்களின் மனம் செல்ல மறுத்தது.

இராணி எனிரிடாவின் தாயார், பிரான்சிலே அடைந்த அல்லலை ஆற்றிக்கொள்ளலாம் என்று எண்ணிப் பிரிட்டன் வர, அங்கு பெரும்புயல் வீசக் கண்டு, எந்த நேரத்தில் என்ன ஆபத்து நேரிடுமோ என்று திகில்பட வேண்டி இருந்தது. நூறு துப்பாக்கி வீரர்கள் காவலுக்கு அமர்த்தப்பட்டனர்; பிரபுக்களிடம் அம்மை முறையிட, அவர்கள், மாமன்றத்தைக் கேட்டிட, "கேடு வராமல் பார்த்துக்கொள்கிறோம்; எனினும் கத்தோலிக்க மார்க்கத்தவர் நாடு இப்போதிருக்கும் நிலையில், அம்மை, இதைவிட்டுச் செல்வது நலம்" என்று மாமன்றம் கூறிவிட்டது.

ஏய்த்துப் பிழைத்தவர்கள், அடக்கி அழித்தவர்கள், ஆணவக்காரர்கள், அனைவரும், அஞ்சுகின்றனர், மக்கள் கனல் கக்கும் கண்ணினரானதும்! ஆனால் புனல் நிரம்பிய கண்ணினராக மக்கள் இருந்த போது, யார் ஆறுதல் கூற முன் வந்தனர்? கேலி பேசினர்!

பதின்மூன்று பேர் கொண்ட கமிட்டி நான்கு திங்கள் பணியாற்றி இருபத்து எட்டு குற்றங்களைப் பட்டியலாக்கித் தந்தது, ஸ்டாபோர்டுக்கு எதிராக.

நாடு நன்கு அறியும் அந்தக் கொடியவன் செய்ததை, எனினும் முறைப்படி காரியமாற்ற வேண்டும் என்பதற்காக, குற்றப் பட்டியலைத் தயாரித்து, மாவீரன் பிம், வீர உரை ஆற்றினன்.

மக்களின் உடைமைக்கும் உயிருக்கும், இரண்டினும் மேலான உரிமைக்கும், ஸ்டாபோர்டு உலை வைத்ததை விளக்கிப் பேசினர், பிம்.

அவன் கூறியதை மறுத்துரைக்க ஸ்டாபோர்டுக்கு வாய்ப்பும் அளிக்கப்பட்டது.

ஸ்டாபோர்டு மீது வெகுண்டெழுந்தவர்கள், பிரிட்டிஷ் மக்கள் மட்டுமல்ல, ஸ்காட் மக்கள் சீறினர், அயர் மக்கள் கொதித்தனர், அனைவருக்கும் கேடுபல செய்தவன் இந்தக் கொடுங்கோலன்.

மாமன்றத்தைப் பதினோராண்டுகள் கூட்டாமல் மன்னன் இருந்தது, இந்த மமதையாளன் தூண்டுதலால்தான்.

ஸ்காட் மக்களிடம் சமரசம் பேச மன்னன் முற்பட்டதைக் குலைத்து மீண்டும் போர் மூட்டி விட்டதும், இவனே.

அயர் மக்களோ, இவனுடைய அழிவுத் திட்டத்தால், மிகவும் நொந்து போனவர்கள். மாளிகைகளிலும் சிறு குடில்களிலும், பண்ணைகளிலும் பட்டி தொட்டிகளிலும், இவன் நடத்திய பயங்கர ஆட்சியின் விளைவுகள், நெஞ்சை உலுக்கும் காட்சிகளாக இருந்தன—கருகிய பிணங்கள், தீய்ந்துபோன வயல்கள், இடிந்த மாளிகைகள், ஒடிந்த உள்ளங்கள்!

மூன்று நாடுகளிலும், கொடுமைகள் புரிந்தவன்—பதினோராண்டுகள் மக்களைப் பதறப்பதறத் தாக்கினவன், மாமன்றத்தினிடம் சிக்கிக்கொண்டான்; இருபத்து எட்டு வகையான குற்றங்கள். ஒவ்வொன்றும் நாட்டுக்குப் பெருங்கேடு விளைவித்தவை. மனித வேட்டையாடுவதிலே மட்டற்ற மகிழ்ச்சி காட்டிய அந்த மாமிசப்பிண்டத்துக்கு, மறுத்துப் பேசவும் வாய்ப்பளித்தது, மாமன்றம். மக்களுக்கு இது பிடிக்கவில்லை! ஆரவாரம் செய்தனர். அக்ரமக்காரனைக் கொன்று போட்டாக வேண்டும், அவனிடம் வாதிடுவது கூடாது, அவன் செய்த கொடுமைகளுக்குச்சாட்சிகள்

( 4-ம் பக்கம் பார்க்க )

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

காஞ்சி] 21—8—55 [ஞாயிறு

# மீண்டும்! மீண்டும்!!

அதிதீவிர உணர்ச்சியோடு, இந்த ஆண்டு சுதந்திரநாளைக் கொண்டாடியிருக்கக்கூடும்—தேசிய நண்பர்கள்! அலங்கார விளக்குகள் அதிகமாகவும், புதுக்கொடிகளை வீடெல்லாம் கட்டியும், வசதிகிடைத்த இடத்தில் பொதுக்கூட்டங்கள் கூட்டியும், 'போரில்' வெற்றிகண்ட வீரரைப் போல் பிறரை ஏறிட்டுப் பார்த்தும் புளகாங்கித மடைந்திருக்கக் கூடும்!! தேசிய ஏடுகளும், சர்க்கார் இந்த எட்டு ஆண்டுகளில் சாதித்த சாதனைகள் என்னென்ன, என்பது குறித்து, வழக்கம்போல நீண்ட கட்டுரைகளைப் போட்டு நிரப்பிவிட்டன. ஆண்டுகள், எட்டாகிவிட்டன! டில்லிக் கோட்டையிலே, ஆகஸ்டு 15 அன்று மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டிருக்கும்—புது முறுக்குடன். பூவுலக முழுதும் சுற்றி வந்து 'பாரதத்துக்கு'ப் பெருமை தேடித் தருவதாகக் கூறப்படும் பண்டித நேரு அவர்களைப் பற்பல கோணங்களில், கேஸ்கரின் விளம்பர இலாகா படம் பிடித்திருக்கும்! கொடியேற்றப்படும்போது, மரியாதைக்காகப் பீரங்கிகள் வெடித்திருக்கும்—அந்த வெடியின் ஓசை கேட்டு, விழாவைக் காணமுடியாதோர், 'ஏறுகிறது, நம் கொடி!' என்று இதயம் களித்திருக்கக்கூடும். அவர்தம், பார்வையை, பாட்னாவுக்கு அழைக்கிறோம். சில தினங்களுக்கு முன், அங்கும் வெடிசப்தம் கேட்டிருக்கிறது—ஒருமுறையல்ல, இரண்டு மூன்று தடவைகள்!! அதன் விளைவாக, எட்டுப் பேர், பிணமாகியிருக்கிறார்கள்—எங்கள் காங்கிரசு, ஆட்சிக்கு வந்து எட்டாண்டுகளாகிவிட்டன! என்று, நண்பர்களும் அவர்தம் தலைவர்களும் ஆனந்தவாரியில் ஆழ்ந்துகிடக்கும் இதே சமயத்தில், எட்டு வீடுகளிலே 'மாண்டாயோ, மகனே!' என்றும், 'மாபாவிகள்' உங்களைத் துப்பாக்கியால் துளைத்துவிட்டார்களே!' என்றும் ஓலமும் சாபமும் கேட்டுக்கொண்டிருக்கும். இருபது பேருக்குமேல் காலிழந்தும், கரமிழந்தும் கிடக்கிறார்களாம், அங்கே! இத்தனைக்கும் காரணம், சர்க்கார் உயர்த்திய பஸ்கட்டணத்தை எதிர்த்து—ஒரு மாணவன், அதிகம் தர முடியாதென்றானாம்! அதுவளர்ந்து இவ்வளவு பெரிய விபரீதம் விளைந்திருக்கிறது!! பாட்னா வாசியான பாரதத் தலைவர் ராஜேந்திர பிரசாத்தோ, 'புது வீட்டுக்கு' குடி புகுந்துகொண்டிருக்கும் நேரத்தில் ஐதராபாத்திலிருந்து செய்தி தருகிறார், அகில உலகிலும் இந்தியாவின் செல்வாக்கு எட்டு ஆண்டுகளில் கொடிகட்டிப் பறப்பதாக! கொடி பறக்கிறதென்று குதூகலிப்போரைப் பார்த்துத்தான் பாட்னாமக்கள், 'பாவிகளே!' என்று அழுகிறார்கள்! வேட்டுச்சப்தம் கொண்டுபோய்விட்டதே, எட்டு உயிர்களை என்று கதறுகிறார்கள்!! அங்கே, அந்தக் 'கோரம்' என்றால், ஆட்சி நடாத்தும் அதிபர்கள் வாழும் டில்லி மாநகரிலே அதிசயமும் அதோடு சோகமும் கலந்த வண்ணம் அறிக்கையொன்று விடுக்கிறார்கள், டில்லி காரியாலயங்களிலே குமாஸ்தாக்களாகச் சேவை புரியும் சிப்பந்திகள். இடுப்பு வேட்டியுடனும், கோவணங் கட்டிக் கொண்டும் ஆபீசுக்கு வரப் போகிறோம்! கொடிகட்டிப் பறக்கும் உங்கள் ஆட்சியைப் பற்றி, உலகம் கேலி செய்யட்டும்!! என்கிறார்கள். தங்களது குறைகள், நீண்ட நாட்களாகக்கவனிக்கப்படவில்லை என்பது, அவர்கள் குற்றச்சாட்டு. குறைகளில் முக்கியமானது சம்பளம் போதவில்லை, என்பது. 'ஜனாதிபதி' ராஷ்டிரபதி நிவாஸ் ஒன்று சிம்லாவிலிருக்க, ராஷ்டிரபதி பவன் ஒன்று டில்லியிலிருக்க, ராஷ்டிரபதி நிலையம் ஒன்றுக்குள் நுழைகிறார், ஐதராபாத்தில். 80 ஏகர், பரப்புள்ளதாம்! 24 அழகிய மண்டபங்கள் உள்ள இடம் என்றால் எவ்வளவுபெரிய மாளிகையாயிருக்கும் அது!! தெற்குக்கும் வடக்குக்குமிருக்கும் 'தூரத்தை'குறைக்க, இங்கே ஒரு மாளிகையாம் — தென்னாட்டாருக்குத் திருப்தியாக இருக்க வேண்டுமென்பதற்காகப் பெயரையும், 'நிலையம்' என்று வைத்திருக்கிறார். நிவாஸ். நிலையமாகிறது! இது 'அவர்களுக்கு' உள்ள 'ஐ[illegible]ரவேகத்தை'க் காட்டுகிறதேயொழிய, இந்தப் புதுவீடு தேடும் வேலையால் 'பொங்கிடும் உறவு—வளர்ந்திடும் பாசம், என்று எவரும் கருதமாட்டார்கள். 'ஜன அதிபதி' சமரசம் பேசுகிறார்!! தெற்கை, வடக்கு ஆட்டிப் படைப்பதாகக் கூறப்படுவது தவறு—என்கிறார்!! அவர், இந்தியா ஒன்றாக இருப்பதால், அடையும் கௌரவமும் லாபமும் அதிகம்—ஆகவே, அப்படித்தான் பேசுவார்!

'நமது' காமராஜரும், சுப்ரமணியமும், டில்லிக்குப் போய்விட்டுத் திரும்பியிருக்கிறார்கள்—ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ரூ 394-கோடி, டில்லி செலவழிக்கவேண்டும் என்று திட்டம் தீட்டி, "பாருங்கள்! போய் டில்லி பீடத்தை என்ன செய்யப்போகிறோம்?' என்று தொடைதட்டி, குற்றாலத்திலே தமிழ்நாட்டுக் காங்கிரசைக் கூட்டித் தீர்மானம் போட்டு, தி. மு. கவினர் 'ஐந்தாண்டுத் திட்டத்தில் டில்லி ஓரவஞ்சனை செய்கிறது—என்று பேசுகிறார்களாமே, போஸ்டர்போட்டுஒட்டுகிறார்களாமே. அவர்களுக்கு மட்டும் தானா நாட்டுப்பற்று. எங்களுக்கில்லையா?' என்று கேள்விகேட்டோரிடம் பதில் கூறி, நேருவிடம் காமராஜருக்கிருக்கும் 'சக்தி' எவ்வளவு தெரியுமா என்று, துந்துபி முழக்குவோரைப் பேசச்சொல்லி, இத்தனை வைபவங்களுடனும் போனார்கள்!! வழக்கம் போல, திரும்பியும் விட்டார்கள்!! கொண்டுபோன திட்டம் ரூ 394 கோடிக்கு—டில்லி, தரமுடியும் என்று சொன்னது ரூ 200 கோடி.

"என்னங்க, பாதிக்குப் பாதியல்லவோ, பறிபோய்விட்டது போலிருக்கிறது!" என்று கேட்டாராம், திரும்பிவந்த நிதியமைச்சர் சுப்ரமணியத்தை, ஒரு நிருபர்.

"இல்லை! மூன்றில் இரண்டுபாகம் என்று சொல்லலாம்!!" என்று முகத்தைக் கொஞ்சம் சுளித்துக்கொண்டு பதில் தந்திருக்கிறார், அவர்.

முதலமைச்சர் காமராஜரோ ரத்னச் சுருக்கமாக, "டில்லியிலிருந்து திருப்தியுடனேயே வருகிறோம்" என்றாராம். திருப்தி, எந்த வகையிலோ, அறியோம் நாம்! ஒருவேளை, அங்கு தங்கியிருந்த இடம், ஏறிச்சென்ற ஆகாய விமானப் பிரயாணம், இவைகளைப் பற்றி அவர் சொல்லியிருக்கக்கூடும். ஐயோ, பாவம்! அந்தத் திருப்திகளையல்லவே, நாடு கேட்பது!!

சென்றார்களே, நமது மந்திரிமார்கள் — கூடக் கொண்டுவராவிட்டாலும், கொண்டுபோனதிலுமா, பறிகொடுத்துவிட்டு வரவேண்டும்! 394 எங்கே—200 எங்கே. வெட்கமல்லவோ, விலாவைக்குத்துகிறது! இந்த லட்சணத்தில், நேருவை வேறு அழைத்துவந்து சாமரம் வீசப் போகிறாராம்-காமராஜர். போட்டுக்கொண்டு போன திட்டத்தில், இது சோடை, இது சொள்ளை என்று கூட டில்லி சொல்லவில்லை! மிக அருமையாகப் போட்டிருக்கிறீர்கள் என்று கூடப் பாராட்டினார்களாம். அப்படிப் பாராட்டிவிட்டு, பட்டைநாமம்போட்டு அனுப்பியிருக்கிறார்கள்!!

நண்பர் சுப்ரமணியம் இங்கேவந்து பெருமூச்சுவிடுகிறார், "ஊம்! என்ன செய்வது? இந்தியாவில், ஒவ்வொரு மனிதனுடைய சராசரி வருமானத்தைப் பார்த்தால் சென்னை மாகாணத்திலிருப்போர் மிகவும் குறைவாகவே சம்பாதிக்கிறார்கள்! ஆனால், மற்ற இடங்

(16-ம் பக்கம் பார்க்க)

( 2-ம்பக்கத் தொடர்ச்சி )

தேடி அலேவானேன், நாடு நன்கு அறியும், எனவே அவனேக் கொன்றுவிடுக, என்று மக்கள் முழக்கமிட்டனர்.

அயர்லாந்தில் ஸ்டாபோர்டுசெய்த அக்ரமத்தை விவரமாக எடுத்துக்கூற அங்கிருந்து ஒருகுழுபிரிட்டன்வந்தது.

பிரபுக்கள் சபைக்குச் சென்றது விசாரணே! ஸ்டாபோர்டு, தன் திறமை முழுவதையும் காட்டினுன்—குற்றச் சாட்டுகளே மறுத்தான், ஆட்சியை வலுவாக்கத்தான் எடுத்துக்கொண்ட பல நடவடிக்கைகளே மாமன்றத்தார் அக்ரமம் என்று கூறுவது பொருளற்றது என்று வாதிட்டான். துரோகம் இழைத்ததாகக் கூறுகிருர்கள், ஆனல் துரோகம் என்பதற்கு என்ன விளக்கமளிக்கிருர்கள் என்று கேட்டான். மாமன்றத்தின் சீற்றம் இங்ஙனம் வரம்புமீறி, அதிகாரிகள்மீது பாய்வது சட்டத்தையும் ஒழுங்கு முறையையுமே கெடுத்துவிடும் என்று பயமூட்டினுன். என் கதி எதுவோ, அது, மற்றப் பிரபுக்களுக்கும் பிறகுவந்துசேரும் என்று எச்சரித்தான். ஒரு மாமன்ற உறுப்பினர் கூறியபடி, ''தேர்ந்த நடிகன்போல், விசாரணேக் கூடத்தில் ஸ்டாபோர்டு அற்புதமாக நடித்தான்'' எனினும், நாடு, அவன் குற்றவாளி, கொல்லப்படவேண்டியவன் என்று தீர்ப்பளித்துவிட்டது. விசாரணேக் கூடத்தைவிட்டு அவன் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தால்போதும், ஆத்திரம் கொண்ட மக்கள் கல்லால் அடித்துக்கொன்று இருப்பர்கள்.

முகப்பில்......

துரோகி ஸ்டாபோடு பிரபுவுக்கு, மக்கள் அளித்த தீர்ப்பு நிறைவேற்றப்படுகிறது. பலிபீடத்தருகே நிற்பவன்தான், ஸ்டாபோர்டு.

மாமன்றம் இதை அறிந்து, சம்பவத்தை தீடித்துக் கொண்டுபோவதால் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நேரிடும் என்று கருதி, ஸ்டார்போர்டு தண்டிக்கப்பட வேண்டும் என்ற சட்டம் இயற்றினர்—59 பேர் இதை எதிர்த்து ஓட்டளித்தனர், மக்கள் இவர்களின் பெயரை துரோகிகளின் பட்டியலில் சேர்த்து, சதுக்கத்தில் தொங்க விட்டனர்.

விதவிதமான வதந்திகள் பரவின. மன்னனுக்குத் துணேபுரிய பிரான்சிலிருந்து படை வருகிறது! கத்தோலிக்கர் கூடிச் சதிசெய்கிருர்கள், மாமன்றத்தைத் தாக்கக் காலிகள் படை தயாராகிறது என்றெல்லாம் வதந்திகள் உலவின. மக்கள், கோபம்கொண்டனர்.

பலிபீடம் தயாராகிவிட்டது. ஸ்டாபோர்டுகொலேத் தண்டனே விதிக்கப்பட வேண்டியவனே என்று மாமன்றம் கட்டளேயிட்டுவிட்டது. காவலன் கசிந்துருகினுன். நண்பன் உயிரைக் காப்பாற்றும் ஆற்றலும் அற்றுப் போயிற்றே என்று அலறினுன். ''இனி எந்த வேலேயிலும் அவனே அமர்த்துவதில்லே என்று உறுதி கூறுகிறேன், கொல்லாமல்விட்டுவிடுக!'' என்று மன்ருடினுன். மாமன்றம் இணங்கவில்லே, மக்களோ, ''கடமையை, அச்சம் தயை தாட்சணியமின்றிச் செய்க,'' என்று கட்டளேயிட்டனர். மன்னன் ஏதேனும் சூழ்ச்சி செய்து, ஸ்டாபோர்டை தப்பி ஓடச்செய்துவிடுவானே என்ற சந்தேகம்கொண்ட ஆருயிரவர், கிடைத்த ஆயுதம் தாங்கிக்கொண்டு, மாமன்றத்தைச் சூழ்ந்துகொண்டனர்.

நீதி வேண்டும்! கொடியவன் தண்டிக்கப்பட வேண்டும்! என்று ஒரே முழக்கம்.

அரண்மனே அருகேயும் பெருந்திரள்—அரசனேக் கண்டிக்கிறது—அரசியின் கண்களிலே நீர்—பரிவாரம் பயத்தால் நடுங்குகிறது; ஸ்டாபோர்டு சிறையிலே; பலிமேடை தெரிகிறது!

முறைப்படி இந்த விசாரணே நடைபெறவில்லே என்று சிலர் முணுமுணுத்தனர், செயின்ட்ஜான் ''முயலேயும் மானேயும் வலேபோட்டுப் பிடிக்கவேண்டும்,வாட்டி வதைக்கக்கூடாது என்று வேட்டைமுறை உண்டு; ஆனல் ஓநாயையும் நரியையும், கண்ட இடத்தில் கிடைத்ததைக் கொண்டு சாகடிப்பர்'' என்று கூறினர். மக்கள்கொண்ட கருத்தைத்தான் அவர் எடுத்துரைத்தார்.

''என்னேப் பற்றிக் கவலேப்பட வேண்டாம் இறையே! எனக்காகச் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டாம்'' என்று ஸ்டாபோர்டு உபசாரத்துக்காக ஒரு கடிதம் அனுப்பினுன்—மன்னன் கண்களேத் துடைத்துக்கொண்டான், பெருமூச்சுடன், மாமன்றம் அனுப்பிய ஓலேக்கு ஒப்பமளித்தான்.

மரண ஓலே தயாராகிவிட்டது, மன்னன் ஒப்பமும் கிடைத்துவிட்டது என்பதறிந்த ஸ்டாபோர்டு பதறினுன், ''மன்னனே நம்பாதீர்!'' என்ற முதுமொழி கூறிக் கசிந்துருகினுன்.

எப்படிப்பட்ட மன்னனே நம்பினுன் இந்தப்பிரபு! எதன் பொருட்டு நம்பினுன்!

மக்களேப் பூச்சி புழுக்களென எண்ணும் ஒரு மன்னனே நம்பினுன், மக்களே எப்படி வேண்டுமானுலும் அடக்கி ஒடுக்கலாம் என்று மன்னனே நம்பச் செய்தான். பதைக்கப் பதைக்கத் தாக்கினுன், பழிதீர்த்துக்கொள்ளும் நாளன்று, பாகாய் உருகிப் பயன் என்ன, கண்ணீர் உகுத்துக் காணப்போவதென்ன, ஸ்டாபோர்டு, பலியிடப்பட்டான். முதல் முரசு! என்றனர் மக்கள். பலிபீடம் முதல் காணிக்கை!

மன்னன் சார்பினர், ஸ்டாபோர்டு வீழ்ந்துபட்டது கண்டு, விலாவில் வேல் பாய்ந்தவராயினர். பெரும் முயற்சிசெய்து, இந்த மாமன்றத்தை அழித்தாலொழிய, மன்னன் பாடு ஆபத்துதான் என்பது புரிந்துவிட்டது!

படைகொண்டு தாக்கினுல் என்ன? எண்ணம் ஏற்பாடாக உருவெடுத்தது. பயர்சி, ஜெர்மின். கோரிங், எனும் படைப்பிரிவுத் தலேவர்கள், பல்லிளித்தனர். சதிபிறந்தது.

மன்னனுக்காகப் படை கிளம்புவது என்று ஏற்பாடு வகுக்கப்பட்டது. ஆனல், சதியை உடனிருந்து வகுத்துக் கொடுத்த கோரிங் என்பானே, மாமன்றத்துக்கு இரகசியத்தைக் கூறிவிட்டான் — சதிகாரர்களே மாமன்றம் துரத்திற்று—சிலர் ஓடிவிட்டனர், சிலர் பிடிபட்டனர், கருவில் சிதைந்தது காதகம், காவலன்மீது கடுங்கோபம் கொண்டனர் மக்கள்.

மாமன்றம், மக்கள்மீது பூட்டப்பட்டுள்ள தளேகளே ஒடித்தெறிகிறது, கொடுமையைக் களேகிறது, இனி மன்னன் பயங்கரத் தாக்குதலால், தன் நிலேயைப் பலப்படுத்த முயற்சிப்பான், கண்காணிப்பாக இருக்கவேண்டும், எந்த நேரமும் ஆபத்து மூளக்கூடும், எதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்று நாட்டினர் கருதினர்.

நிழலுருவில், இருமுகாம்கள் தெரியலாயின.

பதறிப்போன பிரபுக்கள், பரிவாரம் சூழ, மன்னன் ஓர்முகாமில். ஆணவம்குறைந்திருக்கிறது, எனினும்ஆசை அழிந்துபடவில்லே, தத்துவம் மேலோங்கியே நிற்கிறது.

வெற்றிக்களேயுடன் மாமன்றத்தார், வீர முழக்கமிடும் மக்கள், மற்ருேர் முகாமில்.

கூலிகொடுத்தால் வேலே செய்யலாம் என்பதன்றி வேறு குறிக்கோளில்லாமல் ஒரு பகுதி மக்கள் உள்ளனர்; படையில் சேரவிழைவோர்.

அரசனுடைய ஆதிக்கத்தை நிலேநாட்டுவதற்கென்றே ஏற்பட்ட தனி நீதிமன்றங்கள், நட்சத்திர மண்டபம் போன்றவைகளே, மாமன்றம் கலேத்தது.

படைவீரர்களேக் கட்டாய விருந்தினராக்கும், கயமைக்கு, சாவுமணி அடித்தது.

கட்டாயக் கடன் போன்ற வரிமுறைகளே ஒழித்தது. காட்டுச் சட்டத்தை அழித்தொழித்தது.

மாமன்றத்தின் ஒப்பம் இன்றி வரிவசூலிக்கும் போது, மன்னனுடன் ஒத்துழைத்தவர்களுக்கெல்லாம், சீட்டுக் கிழிக்கப்பட்டது; எதிர்த்து நின்ருேருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டது,

(தொடரும்)

# சன்மானம்

[ ஒரு கற்பனைக் காட்சி ]

இடம்:- பஜனைக் கூடம்.

இருப்போர்:- பக்தர்கள், வெங்கிடேச ஐயங்கார்.

நிலைமைவிளக்கம்:- வெங்கடேச ஐயங்காருக்கு மாலை அணிவித்து மரியாதை செய்கிருர்கள்.

தலைவர்பேசுகிருர்.

தலைவர்:- பக்தகோடிகளே! பட்டாபிஷேகம்நடந்தது பரமானந்தமாக இருந்தது உங்களுக்கெல்லாம். எனக்கோ, வருத்தம் தான்.

இதென்ன, இந்தப் பாபாத்மாவுக்கு ஸ்ரீ ராமச்சந்திரரோட பட்டாபிஷேக வைபவத்திலே, வருத்தம் வர்ரதாமேன்னு எண்ணிண்டு, என்னை எல்லோரும் சபிச்சுவிடுவதுபோலப் பார்க்கிறீர்கள்.

எனக்கு ஏன் வருத்தம்னு நூத்திஎட்டு நாட்களாக நாம் ராம நாமத்தைக் கேட்டுக் கேட்டு ஆனந்த சாகரத்திலே மூழ்கி இருந்தோம்—இன்று பட்டாபிஷேகம் ஆகிவிட்டபடியாலே, நாளையிலே இருந்து, நமக்கு அந்த ரசத்தைப் பருகும் பாக்யம் இராதே என்பதாலே தான் அடியேனுக்கு வருத்தம்,

(பீலர்; பலே! பேஷ்! சிலர் கைதட்டுகிருர்கள்)

நமக்கெல்லாம் ராமகாவியத்தை இந்த நூற்றெட்டு நாளும், தந்து வந்த, நமது பிரம்மஸ்ரீ வெங்கடேச ஐயங்கார், எப்படிப்பட்டவர் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்.

அவர் பெரிய என்ஜினியர் வேலை பார்த்தவர்!

அனுமான், சமுத்திரத்துக்கு அணை போட்டது பத்தி அவர் பேசும்போது அவர் சொன்னர் பாருங்கோ, என்ஜினியரிங் விஷயமா!

அப்படிப்பட்ட பெரிய உத்யோகம் பார்த்தவர், ரிடயரான பிறகு, போகிறகதிக்கும் நல்லது, கேட்கிறவாளுக்கும் புண்யம், லோகத்துக்கும் க்ஷேமம் என்ற நோக்கத்தோடு, ராமாயண காலட்சேபம் செய்தார்.

ராமனுடை கலியாண குணத்தை அவர் எடுத்துச் சொன்னதைக் கேட்டவா ஒவ்வொருத்தரும் ஆனந்த பாஷ்பம் பொழிந்தா. கேட்காதவா, அடடா! நாம் கொடுத்து வைக்கவில்லையேன்னு அழுதா!

நம்ம 'ராமமந்திர்' சார்பில் அவருக்கு இந்தச் சால்வையும்,

(சால்வையைப் போர்க்கிருர். கரகோஷம்.)

ஊர்ப் பெரியவர்கள் அளித்த பணத்தில், செலவு போக, மிச்சமிருக்கும் ஆயிரத்து ஒரு ரூபாயையும்,

(பலத்த கைதட்டல்)

அவருக்குச் சமர்ப்பித்து, ராமானுக்கிரகத்தை நாமெல்லாம் பெறுவதற்கு ஏதுவாக இருந்த புண்ய புருஷருக்கு, சபையாருடைய நமஸ்காரத்தைச் செலுத்துகிறேன். ராமஜெயம்!



வெங்கடேச அய்யங்கார்:- நான், என்ன பேசனும்னே, எனக்குத் தெரியல்லே. ராமா! எல்லாம் உன்னுடை கிருபை! வேறென்ன.

ராம நாமத்தை ஜெபிச்சுண்டு தான், நான் இந்த உபன்யாசம் செய்யத் துணிவுகொண்டது.

ஞானஸ்தாள் எவ்வளவோ பேர் இருக்கா. நான்,—அறுபது வயதாகப் போறது,— இதுவரையிலே, உத்யோகம் பார்த்தவன்.

என்னை ராமாயண உபன்யாசம் செய்யச் சொன்னாருங்கோ அதைவிட எனக்கு வேறே என்னகௌரவம் வேண்டும்! அதோடு, சன்மானம்சால்வை! அந்த, ராமனுக்குத்தான் எல்லாம்.

இந்தச் சன்மானம் இருக்கே ஆயிரம் ரூபாய் — இதை நான் ஸ்ரீராம நாமம் தேசமெல்லாம் பரவி, எல்லா ஜனங்களும், இகபர சுகம் பெறுவதற்கான முறையிலே செலவிடப் போகிறேன்.

இவ்வளவுக்கும், ராமாயண நூலாக வாங்கி அடுக்கிண்டு, ஆறுமாதம் படிச்சுப் படிச்சு, மறுபடியும், இந்த ராமாயண உபன்யாசம் செய்கிறேன், பாருங்கோ—ராமானுக்கிரகத்தாலே, ராமனுடைய சரிதத்திலே உள்ள எல்லா மகிமைகளையும் எடுத்துச் சொல்வதற்கான ஞானத்தைப் பெற இந்தச் சன்மானம். அதிகம் பேச முடியல்லே! ராமா! ராமா!ன்னு சொல்லிண்டே இருக்கத் தோணறது.

வேறே, வேதம், மந்திரம், எதுக்காக! ராமநாமம் போதும்.

(எல்லோரும் பலமாகக் கைதட்டுகிருர்கள். சபை கலைகிறது.)



இடம்:- பக்திநிவாசம்.

இருப்போர்:- வெங்கடேச ஐயங்கார்: எச்சம்மாள், ஏமலதா.

நிலைமைவிளக்கம்:- மூவரும், பணமுடிப்பைப் பிரித்து எண்ணுகிருர்கள்.

சந்தேகம் வருகிறபோது ஐயங்கார்,

ரூபாய் செல்லுமா என்பதற்காகத் தட்டிப் பார்க்கிறார்.
ஈய, ஓரணுக்களை, ஏமலதா கண்டுபிடித்து எடுத்துக்காட்டுகிறாள்.
இடையிடையே ராமா! ராமா! என்று ஜெபித்தபடி இருக்கிறார்.

எச்சம்மாள்:- கொஞ்சம் சும்மா இருங்கோ-கணக்கு மறந்துபோறது .......

வெங்கடேச ஐயங்கார்:- எல்லாம் சரியாத்தாண்டி இருக்கும்...

ஏமலதா:- பதினெட்டு ஓரணு பில்லைகள், ஈயம்......ஏம்பா......... பதினெட்டு...

வெ:- கிடக்குது, போ, ஏமு! எதோ, ஏழைகள், உண்டியில் போட்டது......

எச்:- தெரியுமோ, இந்த சன்மானத்திலே பாதி ஏமுவுக்கு......

வெ:- பத்ராசலம் போகலாம்னு ஆசை......

ஏச்:- பத்ராசலமும் போவீர் பண்டரிபுரமும் போவீர்......நான் தான் சொல்லிண்டே இருக்கனே ...உம்ம அக்கா பையனுக்கு எழுதுங்கோ, அவன் ரயில்வே பாஸ்வாங்கித் தருவன்னு...கேட்டாத்தானே...நம்ம கோந்தைக்கு, நல்ல மோஸ்தரில் வளை செய்து போடணும்னு நேக்கு ஆசை. பட்டாபிஷேகம் ஆகட்டும் சன்மானம் தாராமலா இருப்பான்னுதான் எண்ணிண்டுவந்தேன்.

ஏம:- உன்னோடை வாக்கு எப்பவும் பலிக்கிறதுடி...

எச்:- உன் தோப்பனாரையே கேட்டுப்பாரேன்...அவருக்கு உத்யோகம் உயரப்போகுதுன்னு நான் சொன்னேனா இல்லையான்னு.....

வெ:- வளையல் செலவு போக மிச்சம் என்னதான் இருக்கும்...

எச்:- நேக்கென்ன தெரியும், நாங்க சேட்கடைக்குப்போய், வாங்கிண்டு வாரோம்...பில் பார்த்துப் பணம் கொடுங்கோ...



இடம்:— நகைக்கடை
இருப்போர்:— சேட் ராம்ஜி, சேஷாசல செட்டியார், எச்சம்மாள், ஏமலதா.

நிலைமைவிளக்கம்:- சேட்ராம்ஜி, திண்டு மீது சாய்ந்துகொண்டு கடை வேலைகளைக் கவனிக்கிறார்.

அவருக்கு அருகே இரும்புப் பெட்டி இருக்கிறது.

மேலே, அஷ்டலட்சுமி படம் வெள்ளியில், செய்து தொங்கவிடப்பட்டிருக்கிறது.

நேரு பண்டிதருடைய படம், பெரிய அளவில் பக்கத்தில் இருக்கிறது.

சேட், கடையில், வந்துள்ளவர்களைக் கண்டு களித்துக்கொண்டிருக்கிறார்.

அழகான கண்ணாடி 'பீரோக்களில்' உள்ள நகைகளை, அவ்வப்போது கடை குமஸ்தாக்களுக்குக் காட்டி, அதை எடு, இதைக்கொடு. என்று கட்டளையிடுகிறார்.

நாற்பது வயதான சேஷாசல செட்டியார், சேட்ஜீக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, கணக்கேடுகளைபுரட்டுவதும், நகைகளுக்கு விலை சொல்வதும், விற்பனைப் புள்ளி குறிப்பதுமான அலுவலைச் செய்துகொண்டிருக்கிறார்.

வேறு ஆட்களும் வேலை பார்க்கின்றனர்.

எச்சம்மாள், நாற்பது வயதானவள்; நடை நொடிபாவனை அவர்களை முப்பது வயதான மாதுபோலாக்குகிறது.

காதிலே வைரத் தோடு மூக்கிலே வைர பேசரி, கழுத்திலே நாலு வடம் செயின், கையிலே மும்மூணு வளை; காஞ்சீபுரம் பட்டுச் சேலை; 'டபோடா' ஜாக்கட்.

ஏமலதா பனிரண்டு வயதுப் பெண் போல, ஒயிலும் பேச்சும் சிரிப்பும் கொண்ட பதினெட்டு வயதுப் பாவை; எச்சம்மாளின் மகள்.

காதில், 'லோலக்கு;' மூக்கில், ஒன்றும் இல்லை. கழுத்தில், மெல்லிய செயின், கையில் ரிஸ்ட்வாட்ச்! ஷோலாப்பூர் சேலை. 'வி" கழுத்து ஜாக்கட்.

இருவரும் கடையில் வந்தமருகிறார்கள். ஏமலதாவின் கண்கள் சுழல் விளக்காகி, விட்டன.

எச்சம்மாள் ஒரு கெம்பீரமான புன்னகையுடன், சேஷாசல செட்டியாரைப் பார்த்து.

ஏ:- சௌக்யமா......

சேஷா:- வாங்க...கொழந்தெ...?

ஏ-- என் பொண்ணுதான், ஏமலதா...

ஏம:- யார்டி இவர்...

ஏ:- சும்மா இரு ஏமு...சேட்டு... என்ன வேலை மும்முரமோ...

சேட்:- அரேரே, ராம், ராம், வாங்கோ, வாங்கோம்மா...செட்யார் அம்மா வந்திருக்காங்கோ...

சேஷா:-ஆமாம்...

ஏம:-இவரோட பேர் என்னடி, சேட் பேருதான் எழுதியிருக்கு, ராம்ஜின்னு...

சேட்:- அச்சா! அச்சா! நம்மள் பொண்ணு...? ஏம்மா, பொண்க்கி அச்சா பேஷன் நகையெல்லாம் போடுங்கோ...ஷாதி...அரே, கல்யாணம் இன்னும் செய்தாங்கோ இல்லே...

ஏம:- தமிழைப் போட்டுக் கொலை பண்றயே...

சேட்:- நாம்ம என்ன செய்வான் சொல்ங்கோ—நாமோ குஜராத் தேசம் வந்தான்......நீங்கோ இந்தி மாலும்...

ஏ:- ரொம்ப நன்னாயிருக்கு, நீ தமிழ் பேசறதும், அவ உன்னைக் கேள்வி கேட்கறதும்; நல்ல பாஷையில் கைவளை கொடுக்கச் சொல்லு ...



சேஷா:- கொழந்தைக்குத்தானே...

ஏம:- ஆமாம்...நான் வேண்டாம்னாலும் விடுவதா இல்லை...

சேஷா:- ஏம்மா, வேணும்னு சொல்றிங்க. உபயோகமத்ததுங்களெல்லாம் கலகலன்னு வளையலை போட்டுக்கொள்றுங்க, உங்களுக்கு என்னங்க குறைச்சல்...

ஏ:- திவான் பகதூரோட பேத்தின்னு இருந்தூட்டா போதுமோ...

சேட்:- அம்மா, திவான் பகதூர் ஹே?...

சேஷா:- கொழந்தையோட தாத்தா திவான்பகதூர் தேப்பெருமாள் அய்யங்கார்...

சேட்:- இப்ப, பகதூர் நை; பூஷண் டைடில், பத்மாபூஷண்...

எச்:- ஆமாமாம்......விபூஷணன்' சுக்ரீவன், அங்கதன், சூரியன்னு ஏதேதோ பட்டம்! கிடக்கட்டும் என்ன பிரயோஜனம்......என்னோட தோப்பனார்...

சேட்:- க்யா தோப்பு...? மாங்கா, தேங்கா...

ஏம:- இடியட்....தோப்பனார்னா சேட், அப்பா, பிதா.

சேட்:- அரே, ராம்! ராம்! பாதர்... அப்பா...தோப்பார்...

எச்:- அவன் நாக்கிலே தர்ப்பையைப் போட்டுக் கொளுத்து.

ஏம:- தோப்பனார்...

சேட்:- தோ பா, நார்

ஏச்:—கர்மம்! கிடக்கட்டும், வளையைக் காட்டச் சொல்லு, செட்டியார் எடுத்துண்டு வாங்கோ...ஏமு இவர் பெரிய சீமான் இந்தக் கடை வீதியிலேயே, இவரோட நகைக் கடைதான் ரொம்பப் பெரிசு...

சேஷா:- ஏனுங்க இப்ப, அந்த ராமாயணம்...

சேட்:- அரே, அய்யர் ஊட்டம்மா ஆசைப்படருங்கோ...உனக்கென்ன கஸ்டம்...சொல்லட்டும்...

ஏச்:- சேட்டு! உனக்கும் தெரிஞ்சிருக்குமே. சேஷாசல செட்டியார் ஷராப் கடைன்னு ரொம்பப் பிரக்யாதி. எங்க ஊர் ராமர் கோயிலுக்குக் கோபுர கைங்கரியம், இவர் தான் செய்தார்...

சேஷா:- நவராத்ரி உற்சவங்கூட, நான்தான்...

ஏச்:- ஆமாம், திவ்யமா இருக்குமே...நாயனக் கச்சேரி பிரமாதமா இருக்கும்...

ஏம:- ஏண்டி! நான்கூட ஒரு வருஷம் இவா ஆத்துக்குப் போயிருக்கேன்...

சேஷா:- கொழந்தெ, கிருஷ்ண வேஷம் போட்டுக்கொண்டு வந்தது, அட அடா! தத்ரூபம் போங்க ...

சேட்:. பகுத்சுந்தர்...அச்சா...

ஏச்:- செட்டியார் உம்ம கடையிலே இருக்கறது, உம்மோட புண்யம்னு எண்ணிக்கோ, சேட்! பெரிய, தர்மவான்...

ஏம:- நான், முதல்லே இவரை அடையாளம் தெரிஞ்சிக்கல்லே...

ஏச்:- கொஞ்சம் இளைச்சி போயிருக்கார்...கஷ்ட காலம்...சொந்தமா வியாபாரம் செய்திண்டிருந்தார்... ஏதோ ஒரு கேஸ் வந்து அவருடைய பிராணனையே வாங்கிடப் பாத்துது...

சேட்:- ஆமாம், படே கேஸ்... அரே, ராம்! திருட்டு நகை வாங்கறான்...ஜெயில்லே போடருன்: கெவர்மெண்டான்...

சேஷா:- திருட்டு நகைன்னு தெரியாம வாங்கினது...

ஏச்:- அதை எடுத்துச் சொல்லி வாதிச்சி அவரைமீட்டுண்டு வர்ரதுக்கு, உங்கபெரியப்பா, கொஞ்சமாவா பாடுபட்டார்...

ஏம:- பெரியப்பாதான் வக்கிலா...

சேஷா:- ஆமாம்......பொதுவா, எனக்கு அஷ்டமத்திலே சனி...... பெரியஐயரு சொன்னர்......சனீஸ்வரன் கோயிலுக்குக்கூட விளக்கு வைத்தேன்...

ஏச்:- கவலைப்படாதிங்கோ. பகவான் எண்ணைக்காவது ஒருநாள், கண்ணைத்திறந்து கடாட்சிக்காமலா போவர்...வளையல் காட்டுங்கோ, பொழுது ஆகறது...

(செட்டியார் வளையல்களைக்கொண்டு வரச்செல்கிருர்)

சேட்:- மனுஷன் நல்லவன்..... ஆனல் ரொம்ப'டல்...புத்திகுரைச்சல்...கணக்கு சரியாப்பாக்ருன் இல்லே...பகவான் சேவா அச்சா... நம்ம பணத்துமேலே கவனம் இல்லைபோனு, பகவான் நம்மளை கெடுத்துப்போடருர்...

ஏச்:- ஆமாம், சேட்! ஆசாமி ஒரு மாதிரி. இரண்டாங் கெட்டான் ...எல்லோரையும் நம்புவன்...

ஏம:- சுத்த அசடுன்னு சொல்லு ...

ஏச்:- போடி, வாயாடி...

(செட்டியார் ஒரு புது தினுசான வளையலைக் காட்டுகிருர்)

சேட்:- அச்சா! இது உங்க பொண்ணுக்கு சரியான வளையல் ...

ஏம:- என்ன பேர், இந்த வளை...

சேட்:- இதான், வைஜயந்தி வளையல்...தெரியருன் இல்லே...வைஜயந்தி வளையல்...ஆட்டம் ஆடுரு... வைஜயந்தி...நம்மள் தேசம் மேலே போரு, இலட்சம் இலட்சம் கொண்டுவர்ரா இல்லே, டான்சு, நம்மள் தேசம் வாலா பொகுத் குஷியாவருன்...வைஜயந்தி வளையல் மூணு சவரன்...

ஏச்:- பிடிக்கறதாடி...

சேட்:- எல்லாரும் நல்லா இருக்கு சொல்ருங்க வைஜந்தி டான்சு...

ஏம:- அவ டான்சு நன்னு இருந்தா என்ன; நன்னு இல்லாமே போனு என்ன...

சேஷா:- நல்லா இருக்கும்...வளை, சுத்தமான வேலை...

ஏம:- சரி...இதே வாங்கிவிடலாம் ...நாலு போதும்...

சேஷா:- சேட்...கணக்கிலே எழுதிக்கொண்டு கொடுக்கலாம்...

ஏச்:- கணக்கும் வேண்டாம் காகிதமும் வேண்டாம் விலையைச் சொல்லிக் கொடுங்கோ...நாளைக்கு, ஆத்துக்கு வாங்க செட்டியார், பணம் கொடுத்துவிடரோம்...

சேட்:- அச்சா!...சரி எடெபோடு ...பில் எழுது செட்டியார்...

ஏச்:- கூலி, அதிகமாப் போட்டுடப் போறே...

சேட்:- கூலி, ஒரே ரேட்...... வைஜயந்திமாடல் முப்பது ரூபாய்... பைசா குறைவு இல்லே...ஆமாம்... மார்க்கட்ரேட்...முப்பது ரூபா......

ஏம:- ஏண்டி.... எதுக்கும் நாளைக்கு இதை ஆத்துக்கு எடுத்துண்டு வரச்சொல்லேன்...அப்பாவிடம் காட்டுவோம்...

ஏச்:- அந்த கர்நாடகத்துக்கு இதெல்லாம் பிடிக்கறதோ இல்லையோ...

சேஷா:- சரிங்க.....அப்படித்தான் செய்யறது...மேலும், இன்றைக்கிக் கரிநாள்...

ஏச்.- நல்லவேளை...நேக்குக் கவனமே இல்லை, கரிநாள்லே, புதுசாநகை வாங்கலாமோ...சேட்! நாளைக்கு, ஆத்துக்குக் கொடுத்து அனுப்புங்கோ...நாங்க வர்ரோம்...

சேட்,- அச்சா.....செய்யுங்கோ.... கலர் சாப்புடருன் இல்லே...

ஏச்:- வேண்டாம், சேட்! செட்டியார், வர்ரேன்...நாளைக்கு சாயரட்சை வாங்கோ...

சேஷ:- ஆகட்டுமுங்க...வண்டி கூப்புடச் சொல்லட்டுங்களா...

ஏம:- வேண்டாம்...அடி அம்மா, இப்படி வேடிக்கையா நடந்தே போவமே, கடைவீதியைப் பார்த்து ரொம்ப நாளாறது...

ஏச்:- சரி வா, போவோம்.

(புறப்படுகிருர்கள்.)



இடம்:— கடைவீதி

இருப்போர்:—எச்சம்மா, ஏமலதா, கன்னம்மா.

நிலைமை விளக்கம்:— கடைவீதி கவர்ச்சி கரமாக இருக்கிறது.

சுமாரான கூட்டம்.

எச்சம்மாவும் ஏமலதாவும், பேசிக் கொண்டே செல்கிருர்கள்.

ஏமலதாவின் அழகு பலருடைய கவனத்தை இழுக்கிறது.

சில வாலிபர்கள், அவளேயே உற்றுப் பார்க்கிருர்கள்-

"உன்னைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ?" என்ற சினிமாப் பாடலை மெல்லிய குரலில் பாடிக் காட்டுகிருன் ஒரு துணிவுள்ள வாலிபன்.

இவைகள் எதையும் கவனிக்காமல், தாயும் மகளும் செல்கிருர்கள்.

நடுத்தர வயதுள்ள ஒரு மாது, எச்சம்மாவைப் பார்த்துவிட்டு, அருகே வருகிருர்கள்.

அவர்களைக் கண்டதும்......

எச்சம்மா:- யாரு...கண்ணம்மா!... ஏண்டிகண்ணம்மா, அடையாளமே தெரியல்லையே....சௌக்யமா? எங்கே இருக்கறே? எங்கே போயிட்டுவர்ரே? முகமெல்லாம் கருத்துப்போயி இருக்கு...

கண்ணம்மா:- இருக்கிறேன்... அடையாளம் தெரியுதோ இல்லையோன்னு பார்த்தேன்...

எச்:- நன்னா இருக்குடி நீ சொல்றது...எப்படி மறந்துடுவேன்...... அடி, ஏமு! இவ, என் பிராண ஸ்நேகிதி......என்னோடகூடப் பொறக்காதது ஒண்ணுத்தான் பாக்கி...பள்ளிக்கூடத்திலே ஒண்ணு படிச்சோம்...

ஏமு:- நீ, பள்ளிக்கூடம் வேறே படிச்சாயா...

எச்:- வாயாடி!...கண்ணம்மா, இப்ப, எங்கே இருக்கே? இதே ஊருக்கே வந்துவிட்டாயா....

கண்:- ஆமாம்...மாசம் ஆறு ஆகுது வந்து...பட்டணத்து வாழ்க்கை முடிஞ்சுப்போச்சு... விஷயம்தான் உங்களுக்குத்தெரிஞ்சிருக்குமே...

எச்:- முழுதும் தெரியாது...உன் புருஷனுக்கு என்னமோ வியாதின்னு கேள்வி...

கண்:- செய்யாதவைத்யம் இல்லே ...சொத்துபோனு என்னன்னு துணிஞ்சித்தான் செய்தோம்... மதனப்பள்ளிக்கும் போயிருந்து பார்த்தோம்...

எச்:- என்னடி பண்றது...இப்ப என்ன பண்ணிண்டிருக்கான்...

கண்:- என்ன செய்ய முடியும் அவராலே! ஏதோ கூழோ தண்ணியோ குடித்துவிட்டு, பெரிய கோயில் கோபுர வாசற்படியிலேயே விழுந்து கிடக்கிருரு...

எச்:- நீ, என்ன செய்யறே...

கண்:- என்னம்மா செய்யறது... எனக்கே வேதனையாகத்தான் இருக்கு சொல்ல...பலகாரக்கடை வைச்சிருக்கேன்...

ஏமு:- ஓட்டல் பிசினஸ் ரொம்ப இலாபமாச்சே.

கண்:- ஓட்டலாவது கிளப்பாவது. ...அதுக்கு நான் பணத்துக்கு எங்கேம்மா போவேன், சும்மா, முறுக்கு மசால்வடை சுட்டு விற்கறது.....அமாவாசை கிருத்திகைக்கு இட்லி, தோசை...

எச்:- நீ வாழ்ந்த வாழ்வும், இப்ப உனக்கு வந்திருக்கிற கஷ்ட காலமும்...நினைச்சாலே வயிறு 'பகீர்ன்' எரியறது...என்ன செய்யலாம்... பகவத் சோதனைன்னு எண்ணிக் கொள்ள வேண்டியதுதான்...

கண்:- எங்கேம்மா, நடந்து போயிட்டுவாரே...

எச்:- ஏமலதா...என் பொண்ணு, வளையல் வேணும்னு...சேட் கடைக்கு போயிட்டு வர்றேன்...

கண்:- கடை நகை ஏம்மா... செய்தா நல்லது எங்க வீட்டிலே எப்பவும், எந்த நகையும் வீட்டிலேயே செய்யறது......தெரியுமே உங்களுக்கு...

எச்:- ஆமாம்...ஏன் தெரியாது... கலியாணத்துக்கு 'இரவல்' கொடுக்கறதுக்குன்னே இவா ஆத்திலே ஒரு செட் நகை இருக்கும்டி ஏமு! பெரியகுடும்பம். வீடு, பஜனைக்கூடமா இருக்கும். நம்மோட உறவுதான் ஒருத்தர் சுந்தராச்சார்னுபேர், அவர்தான் பூசை...

கண்:- இப்ப காணோமேம்மா அவரு...எங்கே?...

எச்:- பிர்லா தெரியுமோ, பெரிய கோடீஸ்வரர்—அவர் ஒரு பிரம்மாண்டமான கோயில் கட்டிஇருக்கார் பம்பாயிலே; சுந்தராச்சார் இப்ப அந்தக்கோயிலிலே வேலை பார்க்கருர்...

கண்:- அப்படிங்களா.....என்னை வளேம்மா வாங்கினங்க...

எச்:- வாங்கல்லே....நாளைக்குப் பார்த்துக்குவோம்னு வந்துவிட்டோம்...இன்னைக்கிக் கரிநாள்...

கண்:- அப்படிங்களா....நமக்கு எல்லாநாளும் ஒரே நாளாத்தான் இருக்குது...

எச்:- ஆமா, நீ எங்கே போயிட்டு வர்ரே...?

கண்:- நகைக் கடைக்குத்தான்...

எச்:- நகைக் கடைக்கா!

கண்:- ஆமாம்...என்னோட காதோலையை வித்துப் போட்டு, வாரேன்...முனிசிபாலிடியான் என் கடையிலே என்னமோ எலி செத்துக் கிடந்ததுன்னு எழுதிக் கொண்டுபோயிட்டான். அபராதம் போட்டுட்டாங்க, இருபது.... அதுக்கு வேறேவழி! காதோலை ஒண்ணுதான் மிச்சம் இருந்தது அதையும் வித்துத்தொலைச்சாச்சு...

எச்:- பட்டகாலிலேயே படும்னு சொல்லுவாங்களே பெரியவாபார்த்தாயா,...நிஜமாத்தானே இருக்கு... ஏண்டி கண்ணம்மா, இப்ப உன் பிள்ளைக்கு இருபது வயதாவது இருக்கணுமே, அவன் குடும்பத்தைக் கவனிக்கறதில்லையோ?

கண்: ஏன் கவனிக்காமே! நல்லா கவனிச்சுக்கருனே, அவனுக்குன்னு ஒரு குடும்பம் இருக்கும்மா, ...வயத்தெறிச்சலை ஏம்மா கிளப்பறிங்க...

எச்:- அடடா! அதுவும் அப்படியா...

கண்:- ஏதுவோ ஒண்ணுகிடைச்சுது...அது என்ன கர்மமோ அதோட சுத்திகிட்டு கிடக்கருன். ...வீடுவரமாட்டான்...எப்பவாவது வந்தால் அமளிதான்...ஐஞ்சுகொடு பத்துகொடுன்னு, வம்புக்கு நிற்கருன்...

எச், நீ கொடுத்து வைச்சது அவ்வளவுதான்...என்ன தொழில் செய்யருன்...

கண்:- யாரு, அவனு? அவனுக்குன்னு ஒரு தொழில் இருக்கா நல்லா கேட்டிங்க போங்க...

(எதிர்ப்புறமிருந்து ஒரு மோட்டார் சைகில் வருகிறது)

ஏமு:- அடி அம்மா! அதோ பாரேன், யாரு வர்ரதுன்னு...

எச்:- அட, கல்யாணம்தான்...

கண்: யாருங்க...

எச்: என், பிள்ளை...பட்டணத்திலே இருக்கருனே அவன்...



(மோட்டார் சைகிளை நிறுத்திவிட்டு கல்யாணராமன் இறங்கி)

கல்:- எங்கே இப்படிச் 'சிகாரி' போயிட்டுவர்ரிங்க, அம்மாவும் பொண்ணும்...

ஏம:- அண்ணு! நானும் வர்ரேண்டா, மோடார் சைகிலில், பின்னுலே ஏறிண்டு...

கல்:- கொரங்கு, இரு, இரு...

ஏச்:- கடைக்குப் போயிட்டு வர ரோம்...நீ எங்கே கிளம்பிவிட்டே...

கல்:- இங்கே காந்தி சேவா சங் கத்திலே இண்ணக்கி பார்ட்டி..... அதுக்குப் புறப்பட்டேன்....

ஏச்:- அப்படியானு, அவனேயும் அழைச்சிண்டுதான் போயேன்....

கல்:- அங்கே ஒரே ஆம்பள்ளே கூட்டம்னு இருக்கும்....

ஏம:- இருந்தா என்ன, எடுத்து விழுங்கிவிடுவாளோ!

கல்:- ராட்சசியாச்சே நீ, உன் னண்டை எவன் தைரியமா வந்து பேசுவன்....

ஏம:- அம்மா, நீ உன் பிரண் டோட ஆத்துக்குப் போ, நான் அண்ணனோட, கிளப்புக்குப் போயிட்டு வாரேன்....

ஏச்:- சரி, வாடி கண்ணம்மா போவோம்....

(ஏமலதாவும் கலியாணமும் போகிருர்கள்)

கண்:- கண்ணுலம் ஆயிடுச் சாம்மா....

ஏச்:- இன்னும் இல்லே....அவனே டில்லியிலே கேட்கரு.....மாப்பிள்ளே கருப்பா இருக்கான்னு இவ மாட் டேன்கரு......சம்பளம் ஐநூறு...... பையனேட தோப்பனுர், பெரிய மிராசுதார்.....

கண்:- தம்பி, என்ன உத்யோ கம் பார்க்குது....

ஏச்:- அவன் மில்டெரியிலே இருக்கான்....

கண்:- மில்ட்டரியா........அதான் சிகிரெட்டு கொளுத்தித்தள்ளருரு .......

ஏச்:- நீ எங்கே பார்த்தே?

கண்:- என் கடைக்கு எதிர்ப் பக்கமா, ஒரு வீட்டுப் பக்கம், அடிக் கடி இவரு வர்ராரு.....

ஏச்:- அப்படியா.........யாராவது அவனேட ஸ்னேகிதா வீடா இருக் கும்.....

கண்:- அவ்வளவு நல்ல இடமாத் தெரியலிங்களே.......அங்கே எது ஏதுகளோ கூடிக்கொண்டுகுடித்து விட்டுக் கூத்தாடுதுங்கன்னு பேசிக்கருங்க....

ஏச்:- அதெப்படி இருக்கும்.... அப்படிப்பட்ட இடமா இருந்தா, என்பிள்ளே போவானே.....யாரோ, உளறியிருக்கா....

கண்:- என் மவன் இருக்கானே ஊர்பொறுக்கி, அவன்கூட இவரு கூட ஸ்நேகமா இருக்கானேம்மா..... நானே கண்ணுலே பார்த்திருக் கறேனே.....

ஏச்:- உன்மகனேடா....

கண்:- ஆமாம்....

(எதிர்ப்புறமிருந்து ஒரு சிறு கும்பல் கலகம் செயது கொண்டு ஓடிவருகிறது....

எச்சம்மாவும் கண்ணம் மாவும் பயந்து, பாதையின் ஓரம் போய் நின்றுகொள் கிருர்கள்....

காதில் நாராசம்போலப் பாய் கிறது, கலகக்காரர் பேச்சு.)



ஒரு குரல்:- என்னு நாய்னு....நம்ம கையிலே அதெல்லாம் காட் டாதே....ஆமா....டாப்எகிரிடும்....

இன்னேர் குரல்:- யார்டா நீ சூரப் புலி! டேய்! சுருள்கத்தி சுந்தரம்னு, இந்த ஜில்லா பூராநடுங்கும், தெரி யுமா....

ஒரு:- சும்மா நிறுத்துடா......உன் 'டுப்பை, வேறே யார்கிட்டவாவது காட்டு, நம்மகிட்ட நீட்டாதே ஒட்ட நொறுக்கிடுவேன். ......

இன்:- டேய்! நில்லுடா.

ஒரு:- வாடா, காட்டுடா.........குட லேச் சரிச்சுடுவேன். .....

இன்:- யார்கிட்டடா உன் கத்தி ... .....டேய்!

(பெருங் கூச்சலாகிவிடுகி றது. ஒருவன் சிக்கிக்கொள் கிருன். நையப் புடைக்கிருர் கள். சட்டை கிழிந்து போகி றது. வேட்டி அவிழ்ந்துபோகி றது. இரத்தம் கொட்டுகிறது. சூரப்பேச்சு அடங்கிப்போய் கதறுகிருன்)

ஒரு:- ஐயயோ.........அம்மாடியோய் ......ஐயயோ......

(அந்தக் குரல் கேட்டு கண் ணம்மா பதறிப்போகிருள். அருகே சென்று பார்த்து விட்டு, வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்கிருள். அடிப் பவர்களைக் கூப்பிட்டு)



கண்:- ஐயா.........ஐயா..........என் மகன்யா இவன்.......விட்டுடுங்கய்யா ........வேண்டாம்யா......ஐயோ! சுருண்டு சுருண்டு விழருனே...... உங்க காலிலே விழறேன்யா, விட்டு டுங்கோ......

கல:- ராஸ்கல்! நாய் கத்தற மாதிரி கத்தருன் யாரு. ......இந்தப் பயலோட அம்மாவா நீ.....

கண்:- ஆமாய்யா....

கல:- நல்லவேளே போ, உனக் காக அவனே உயிரோடுவிட்டேன் ......பய, என்னு செய்தான் தெரியு மேல்லோ.....

அடி:- நான் என்ன செய்தேன்..... எல்லாம் அந்தப் பாப்பான்......

கல:- பாப்பான் செய்தானு......' ஏண்டா, டேய்!

அடி:- சத்தியமா.......அவன்தான், போலீசுக்குச் சொன்னுன் பலான இடத்திலே சரக்கு இருக்குதுன்னு .........

கல:- யாரு? அந்த மோடார் சைகலிலே வருவானே ...

அடி:- ஆமாம்...கலியாணஐயரு...

கல:- டேய்! என்னடா கதை அளக்கறே...அவன் நம்ம வாடிக் கைக்காரனுச்சே...ஒவ்வொரு நாளும் அரைபாட்டில் தந்துகிட்டு இருக்கருமே...

அடி:- சத்யமா அண்ணேன்... அந்த பாப்பான் வேலேதான்... நீங்க, வெறும் தண்ணியை பிராந் தின்னு சொல்லி ஏமாத்திட்டிங்

களாம், இருபது ரூபா வாங்கிட்டிங்களாம்...பார்டா, இவனுங்களே போலீசிலே மாட்டி விட்டுட்டு மறு வேலை பார்க்கறேன்னு, சொன்னான். போலீசுக்கு அவன்தான் சொல்லி இருப்பான்...

கன்:- பாத்திங்களாப்பா, பழியோரிடம் பாவமோரிடம்..... எச்சம்மா!...எச்சம்மா....அடடா! போயிட்டாங்களே...

கல:- சரி, ஒழிந்து போடா...கலியாணத்தப்பன் வேலையா இது ஆகட்டும், 'டாப்' கழட்டிவிடறேன்..

அடி:- அண்ணேன், வேணும் அவன் கிட்டே போகாதே... போலிஸ் பெரிய இன்ஸ்பெக்டர் அவனுக்கு மாமனாம்!

கல:- போடா! மாமனாவது மச்சானாவது! ஜெயிலுக்குப் பயந்தாத்தானே இதெல்லாம்...இவர்யார் தெரியுமேல்லோ......சுருள் கத்தி சுந்தரம்...சுபேதார் பரம்பரைச் சிங்கம்...தெரியுமா...

அடி:- அண்ணேன், வர்ரேண்ணேன்...

கல்:- (எட்டணா கொடுத்து) போடா, நாஸ்தாவுக்கு வைச்சிக்க...

கன்:- வாடாப்பா....இனியாவது, கெட்டசவகாசம் இல்லாமே இரு. ....

அடி:- அடச் சே! போ!...

கன்:- அடப்பாவி! உனக்கு இன்னும் புத்தி வரலியே...உம்! உன்னைச்சொல்லி என்னப் பிரயோஜனம், உன்னோட எழுத்து அப்படி இருக்கு...

(போகிறான்)



இடம்:— காந்திசேவா சங்கம்.

இருப்போர்:— பிரமுகர்கள் கல்யான் ஏமலதா, வேறு சில பெண்கள்.

நிலைமை விளக்கம்:— ஏமலதா, காந்திமகான் பாட்டுப்பாடுகிறாள். அனைவரும் கரகோஷம் செய்கிறார்கள்.

போலீஸ் மேலதிகாரி தலைமைவகித்துப் பேசுகிறார்.

போலீஸ் அதிகாரி:- லேடீஸ் அண்டு ஜெண்டில்மென்! அதாவது சகோதர சகோதரிகளே! நாமெல்லாம் இன்று ஒரு முக்கியமான காரியமாகக்கூடி இருக்கிறோம். மகாத்மாவோட கொள்கைகளைக் காப்பாத்தறதுன்னு சங்கல்பம் செய்துண்டு இருக்கற, நம்ம சர்க்கார் மதுவிலக்குச் சட்டம் கொண்டுவந்தா. சில பேர், அதை மீறி, திருட்டுத் தனமாகக் குடிக்கறா. அப்படிப்பட்ட பாபாத்மாக்களைக் கண்டுபிடித்து, ஒழிக்க வேணும்னா, தைரியமா, பொதுஜனம் ஒத்துழைக்கவேணும் இப்ப பாருங்கோ ஸ்ரீமான் கலியாணராம ஐயர், வயதிலே சின்னவர்.....ஆனா நல்ல ஞானஸ்தன் மகாத்மாவிடம் அத்யந்த பக்தி.....அவர், நம்ம ஊரிலே, ஒரு போக்கிரிக் கும்பல், திருட்டுச் சாராயம் விற்றுண்டு, போலீசிடம் சிக்காமலே இருந்து வந்தது. கலியாணராம ஐயர், என்ன செய்தார்னா......அந்தக் கும்பலோட நடவடிக்கை பூராவையும் எங்களுக்குத் தகவல் கொடுத்தார். முக்கியமானவா சிக்கிண்டா! முன்னூறு பாட்டில்கள் இருந்தன அந்த வீட்டிலே சோதனை போடும்போது. (பலத்த கைதட்டல்) ஆனா, அவ்வளவும் காலி பாட்டில்கள் (கேலி சிரிப்பு) போலீசுக்கு அருமையான ஒத்துழைப்பு தருவதற்காக, கலியாணராமய்யர், அந்தப் போக்கிரிக் கும்பலோடு பழகி, அவாளை நன்னா நம்பவைத்தார்.

கலி:- அவா என்னைப் பரிபூரணமா நம்பவேணும் என்கிறதுக்காக, நான் பாபம்னாலும் பிராயச்சித்தம் தேடிக்கொள்வோம் என்கிறதைரியத்திலே, சில நாள் அவா கூடச் சேர்ந்து குடித்துமிருக்கிறேன்:

பல குரல்:- பலே! பலே!!

போ:- பார்த்தேளா! இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு, இவர் வேலை செய்திருக்காமல் போனா, எங்களாலே அந்தக் கும்பலைப்பிடிக்கவே முடியாது........ஆகையினாலே, இவருக்கு, நம்ம காந்தி சேவாசங்கத்தின் சார்பிலே நமஸ்காரம் தெரிவிச்சுண்டா போதாது, சர்க்கார்லே சன்மானம் தர வேணும்னு, சங்கத்திலே தீர்மானம் போடணும். நம்ம சங்கத்தின் சார்பிலே இவருக்கு சன்மானமாக இந்த நூறு ரூபாயைத் தருகிறேன்.

(அனைவரும் கரகோஷம்)

எல்லோரும் ஒரு தடவை கலியாணராமய்யருக்கு ஜே! ன்னு சொல்லி அவரை வாழ்த்தும்படியாக் கேட்டுக்கொள்கிறேன்.

(அனைவரும் கலியாணராம ஐயருக்கு ஜே போடுகிறார்கள்)

போ:- முக்கியமானதை மறந்துவிட்டேன்.........மன்னிக்கணும்......... என்னமோ, எம். எஸ்; வசந்தகுமாரி அப்படி இப்படின்னு பேசறோம் ஆனா இங்கே பாடினா பாருங்கோ, இந்தப் பொண்ணு, இவ்ரோட தங்கை.......அட அடா! கேட்கக் கேட்கப் பிரம்மானந்தமா இருந்தது. நம்ம சங்கத்துச் சார்பிலே அந்த.....

கலி:- அவ பேர், ஏமலதா..

போ:- ஏமலதாவுக்கு.........சங்கீத பூஷணின்னு டைட்டில், நான் தர்ரேன்....

(கைதட்டல்)

கலி:- எல்லாம் முடிந்த பிறகு, நான் பேசறேன்.....ஏன்.....முக்கியமான விஷயம் இருக்கு.....திருட்டுச் சாராயம் விற்கற இடத்தைக் கண்டுபிடித்து போலீசிலே சொன்னதாலே, போக்கிரிகளும் சாக்கிரிகளும், என்மேலே அபாண்டம் சொல்லுவா அதை எல்லாம் நீங்க நம்பப்படாது......அவ்வளவுதான்.....

(பலர் கலியாணத்துடன் கை குலுக்குகிறார்கள். போலீஸ் மேலதிகாரி ஏமலதாவின் கன்னத்தைக் கிள்ளிவிட்டு, அன்புடன் அணைத்துக் கொள்கிறார்.)

போலீ:- என்னிடம் என்னவெட்கம் கூச்சம்! நான் உன்தோப்பனார் மாதிரி....

ஏம:- வெட்கப்படவில்லை.... உறுத்தறது உம்ம கோட்டு, பட்டன்....

(போலீஸ் அதிகாரி சிரிக்கிறார் கல்யாணமும் ஏமலதாவும் மோடார் சைகில் இருக்குமிடம் நோக்கிச் செல்கிறார்கள்)

ஏம:- ஏண்டா அண்ணா! அப்பாவுக்குக் கிடைச்ச சன்மானத்திலே நேக்கு வளையல் வாங்கித்தர்ரார்— உனக்குக் கிடைச்ச சன்மானத்திலே, நேக்கு நீ என்ன வாங்கித் தரப்போறே....சொல்லேன்..,

கல்:- ஒரு பூட்டும் சாவியும்...

ஏம:- என்ன, கேலி செய்றே....

கல்:- கேலியா? உன் வாய்க்குப் பூட்டு போட்டு வைக்கணும், இப்படி எங்கேயாவது அழைச்சிண்டு வர்ரபோது .....வாயை

மூடிண்டு கௌரவமா இராமெ, அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டரோடு, என்னடி வளவளன்னு பேச்சு உனக்கு.....



ஏம:- நான் என்ன செய்யறது, அந்த அசடு, என்பின்னுடு சுத்திச் சுத்தி வர்ரது, தொணதொணன்னு பேசறது....என்ன வெட்கம்! ஏன் கூச்சம்! படிச்ச பெண் இப்படி வெட்கப்படலாமோ அப்படி இப்படின்னு பேசிண்டே இருந்தா, நான்பத்து வார்த்தைக்கு ஒரு வார்த்தையாவது பதில் பேச வேண்டாமோ?

கல்:- சன்மானத்திலே பங்கு கேட்கவந்தூட்டா.....பூராவும் கொடுத்து விட்டேன், ஒருகாரியம் செய்யறியா சொல்லு?

ஏம:- என்ன செய்யனும்?

கல்:- அந்த டில்லி பையனைப் பேசாமே கல்யாணம் செய்துக்கோ- இந்தப் பணத்துக்கு உனக்குத் திருகுபில்லே—வைரத்திலே....

ஏம:- வெவ்வேவ்வெ! ஆசையைப்பாரு! அட்டைக் கருப்பா இருக்கான் அந்த டில்லி....நேக்கு என்ன தலைஎழுத்தா அப்படிப் பட்டவனைக் கலியாணம் செய்துக் கொள்ள....முதல்லே உன்னுடை சன்மானப் பணம் பூராவுக்கும் சன்லைட் சோப் வாங்கி அவனுக்கு அனுப்பு.....

கல்:- போடி, போக்கிரி!

★

## சுதந்திர நாளன்று!

—★—

சிறு திட்டான கோவா விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களில் 22பேர் பிணமாயினராம்! வேதனையூட்டும் செய்தி கேட்டு திடுக்கிடுகிறோம்.

# ★ நீலக்கல் மோதிரம் ★

அபூர்வமான நீலக் கல் மோதிரம்; ஊர்ப் பிரமுகர்கள் அவ்வளவுபேரும் ஆச்சரியப்பட்டனர்; பலருக்கு அதை எந்த விலை கொடுத்தேனும் வாங்கி விடவேண்டுமென்று ஆவல். அவனோ, எந்த விலைக்கும் அதைத் தரச் சம்மதிக்கவில்லை.

''வேண்டாமய்யா! இது உங்களுக்கு வேண்டாம். இதை நான் விற்பதாக இல்லை'' என்று பிடிவாதமாகக் கூறி வந்தான்.

காரணம் கூறவும் மறுத்தான்.

கடைசியாக ஒரு கனவான் மிகவும் வற்புறுத்தினர்-காரணமாவது சொல்லச் சொல்லி; அவன் சொன்னான், நீங்கள் எல்லோருமே ஏமாந்துபோகிறீர்கள், இது அசல் நீலம் அல்ல, போலி!'' என்றான்.

கனவானுக்குத் தூக்கி வாரிப்போட்டது. உண்மையாகவா? அசல் நீலம் அல்லவா? போலியா? என்று சரமாரியாகக் கேட்டார். 'ஆமாமய்யா, ஆமாம்! அசல் நீலம் அல்ல இது'' நீரே பரிசோதித்துக்கொள்ளும்'' என்று கூறி மோதிரத்தைக் கொடுத்தான்.

கனவான், நகை வியாபாரிகளிடம் காட்டினார்; அவர்கள் இது அசல் நீலக் கல்; அபூர்வமானது. இரண்டு ஆயிரம் வராகனாவது பொறும் என்றனர்.

''அட முட்டாளே! அசல் நீலத்தை இவன் 'போலி' என்று எண்ணிக் கொண்டு ஏமாறுகிறானே! — என்று எண்ணிய வியாபாரி, நவரத்னப் பரீட்சை நிபுணர்களைக் கலந்து பேசினார். அவர்களும் இரண்டு ஆயிரம் வராகனுக்கு மேல் தரலாம் என்றனர்.

சரி! அந்த முட்டாளிடம், இதை எப்படியாவது அடித்து வாங்கிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்த கனவான், மறுபடியும் அவனை அணுகி ''போலி நீலமாக இருந்தாலும் பரவாயில்லை, இது எனக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது. விலை உன் இஷ்டம் போல் சொல்லு, வாங்கிக்கொள்கிறேன்'' என்று கூறினர்.

''போலி நீலக்கல் மோதிரம் போட்டுக்கொண்டு இருக்கிறேன் என்பது யாருக்கும் தெரியக்கூடாது; கௌரவக்குறைவு என்று எண்ணிக்கொண்டு தான் நான் இதை யாருக்கும் விற்கச் சம்மதிக்கவில்லை. வேண்டாம் உங்களுக்கு; கொடுமய்யா'' என்று கேட்டு வாங்கிப் போட்டுக்கொண்டு, உள்ளே சென்று பழரசம் கொண்டுவந்து கனவானுக்குக் கொடுத்தான்.

கனவானுக்கோ, இரண்டு ஆயிரம் வராகனுக்குமேல் மதிப்புள்ளதல்லவா இந்த நீலம். இந்தப் பைத்யக்காரன், போலி என்றல்லவா எண்ணிக்கொண்டிருக்கிறான்-என்ற எண்ணமே மேலிட்டது.

''ஐநூறு வராகன் தருகிறேன்'' என்றார்.

''இதற்கா! ஐந்து நூறு வராகனா, ஐந்துகூடப் பொருதய்யா'' என்றான்! மோதிரக்காரன்'

''ஆறு நூறு'' என்றான் கனவான்.

''ஒரு போலி நீலக் கல் மோதிரத்துக்கா! உமக்கென்ன பைத்யமா?'' என்று கேலி செய் தான் அவன்.

''உனக்கென்ன, போலிக் கல்லாக இருக்கட்டும், எனக்கு அதுவேண்டும்; தரச் சம்மதமா?'' என்றான் கனவன்.

''நீராக, வீண் நஷ்டத்தைத் தேடிக் கொள்கிறீர். சரி! உமது'ஆசையைக் கெடுப்பானேன், கொடுங்கள் தொகையை, எழுதுங்கள் விற்பனைச் சீட்டு'' என்றான்; கனவான் பணத்தைக் கொடுத்துவிட்டு, இன்னாரிடமிருந்து இன்னார் இன்ன விலைக்கு வாங்கிக் கொண்ட நீலக்கல் மோதிரம் என்று சீட்டு எழுதினர்; அவன் குறுக்கிட்டு போலி நீலக்கல் என்று எழுதும் என்றான், எழுதினர், மோதிரத்தைப் பெற்றுக்கொண்டு, இலாபம் கிடைக்கப்போவதை எண்ணி, நேரே நகை வியாபாரியிடம் சென்று அதைத் தந்தார்.

அவன் ''முன்பு கொண்டுவந்து காட்டினீர்களே அசல் நீலம், அது போலவேஇருக்கிறதேஇந்தப் போலி'' என்றான்; கனவான் மயக்கமுற்றார்.

பழரசம் பருகிக்கொண்டே, தன் நீலக்கல் மோதிரத்தை விரலில் போட்டுக்கொண்டு, ''அடி அம்மா! நீலம்! இந்த ஊருக்கு இதுபோதும், வா வேறு ஊர் போவோம்'' என்று கூறியபடி, பெட்டி படுக்கைகளைத் தயாரித்தான் எத்தன்.

ஏழெட்டுப் பேருடன், இறைக்க இறைக்க ஓடோடி வந்தார், கனவான்

''ஏமாந்து போனேன்......இது...... போலி நீலம்...''

''ஆமாம்! நானே சொன்னேனே... சீட்டும் இதோ தந்திருக்கிறீரே......'' என்றான் எத்தன்.

★

# ஆறு வருஷமாக!

குு:- குடியாத்தம் தேர்தலில் நாங்கள், தங்களைத்தானே ஆதரித்தோம்! நாடே ஆச்சரியப்பட்டது, என்றாலும் எங்கள் பிரசார யந்திரத்தின் முழுத் திறமையையும் தங்கள் வெற்றிக்கே பயன்படுத்தினோம், ஆகையாலே..!

கா: ஆகையாலே கிடக்கட்டும். குடியேற்றம் தேர்தலில் நீங்கள் எனக்கு வேலை செய்தீர்கள்—மெத்தச் சந்தோஷம்—முன்பு?-பொதுத் தேர்தலில்?

குு:- அப்போது இருந்த நிலைமை ,.....

கா:- நிலைமை இருக்கட்டும். அப்போது, என்னைத் தோற்கடிக்கத்தானே முழுமூச்சாக வேலை செய்தீர்கள்?

குு:- ஆமாம்.....ஆனால்....,

கா:- என்ன ஆமாமோ, என்ன ஆனாலோ.....அந்த முன்னேற்றக் கழகத்தான்களோட சங்கதி எப்பவும் ஒரேவிதமாக இருக்கிறது.... நீங்கள் அப்போது ஜி. டி. நாயுடுவுக்கு வேலை செய்தீர்கள்—அவர்கள் நாயுடுவுக்கு ஆதரவு தரவில்லையே....

குு:- ஆமாம்....

கா:- நீங்கள்கூட, காமராஜர் வெற்றிபெற கண்ணீர்த் துளிகள் வேலை செய்தனர் என்று கரடி விட்டீர்கள்.....

குு:- ஆமாம்....அது...அவர்களுக்கும் எங்களுக்கும் விரோதமல்லவா அதனால்....

கா:- நீங்கள் குடியாத்தத்தில் என்னை ஆதரித்தபோது அவர்கள் கேலியும் கண்டனமும் செய்வார்கள் என்று ஏன் நீங்கள் எண்ணவில்லை....

குு:- நாங்களா? எங்களையாவது அந்தப்பயல்கள் கண்டிக்கத் துணிவதாவது.....

கா:- காமராஜரிடம் கைக்கூலி வாங்கினார்கள் என்று சுவரிலே நீங்கள் எழுதிய எழுத்துக்கூடக் கலையவில்லையே....உண்மையில் அவர்கள், முன்பு எனக்கு ஆதரவு காட்டினார்களென்று நீங்கள் கூறுவதாலே, நான் ஏன் இப்போது, அவர்களுக்கு ஆதரவு காட்டக் கூடாது?

குு:- அவர்கள் உங்களை ஆதரிக்கவில்லையே.....குடியாத்தத்தில்.

கா:- குடியாத்தம் கிடக்கட்டும்... முன்பு ஆதரித்தார்கள் என்று நீங்கள் தானே சொன்னீர்கள்.

குு:- அதுசும்மா...விளையாட்டுக்கு .....

கா:- அப்படியா.,..சரி, சரி, இந்த முனிசிபல் தேர்தல்களில் கொஞ்சம் சுறுசுறுப்பாக வேலைசெய்யுங்கள்...

குு:- ஆஹா; சொல்ல வேண்டுமா? பார்ப்பனர் பார்த்து பயப்படவேண்டும், அப்படிப்பட்ட பிரமாதமான வெற்றி காங்கிரசுக்குக் கிடைக்கும்....சந்தேகமே வேண்டாம்....

கா:- இதோபாருமய்யா, பார்ப்பனர் கிர்ப்பனர் இதெல்லாம் வேண்டாம்—ஏனென்றால், பார்ப்பனர்களே சிலபேர் காங்கிரசில் நிற்பவர்கள்.....

குு:- ஏனுங்க அப்படி? பார்ப்பனர்களை நிறுத்தாதிர்கள்....

கா: அதுசரி, அதுசரி..;...பார்ப்பனரை நிறுத்தாவிட்டால், இந்துவும், மித்திரனும் என்னைச் சும்மா விடுமா.....இந்தத் தடவை மேயரே, ஒரு பார்ப்பனர்தான்.

குு:- தஞ்சை ஜில்லாபோர்டுத் தலைவர்கூட ஒரு பார்ப்பனர்....

கா:- ஆமாம், நம்ம குன்னியூர். நீங்கள் கூட எழுதியிருந்தீர்களே தஞ்சைக்குப் பார்ப்பனத் தலைவர் கூடாது என்று.....

குு:- எங்கள் 'ஆசாமிகளுக்கு' கொஞ்சம் விறுவிறுப்பு வேண்டுமல்லவா, அதனாலே....

கா:- அதற்காக நீங்கள் எதையோ பேசுங்கள், எழுதுங்கள், ஆனால் எலக்ஷனிலே மட்டும்....

குு:- அதற்கென்ன, ஆகட்டும்...

கா:- இன்னொரு விஷயமய்யா, நான் நம்ம நேருவை இங்கே வரவழைத்து இரண்டோர் கூட்டம் போட ஏற்பாடு செய்திருக்கிறேன் .....

குு;- நேருவா?.....ஏன்....

கா:- எலக்ஷனுக்கு ஏற்பாடு செய்ய வேண்டாமா....ஏன்யா, உங்களையே நம்பிக்கொண்டிருந்துவிட்டால் போதுமா....

குு:- ஆச்சாரியார் முன்பு வரவழைத்தார் அமர்க்களமாக, நீங்கள் அதைவிட 'ஜோராக' நேருவுக்குக் கூட்டம் நடத்தவேண்டும்....

கா:- அப்படிச் சொல்லு.....அப்போது ஏதாவது கருப்புக்கொடி கிருப்புக்கொடின்னு ஆரம்பித்து விடப்போறிங்க....என்பாடு சங்கடமாயிடும்....

குு:- நாங்களா! செய்வமா? பார்ப்பனர்கள் அதையே சாக்காக வைத்துக்கொண்டு தங்கள் ஆட்சியைக் கவிழ்க்கப் பார்ப்பார்களே..,... எங்களுக்குத் தெரியாதா?

கா:- நேருவுக்குக் கருப்புக்கொடி முன்னே காட்டினீர்களே.....

குு:- நாங்களல்ல, நாங்களல்ல, அது அந்த கண்ணீர்த்துளிகள்....

கா:- அவர்கள் இப்போதும் ஆரம்பித்து விடுவார்களோ?

குு:- அதெல்லாம் நடக்க ஒட்டாதபடி நான் 'பிளான், போடுகிறேன். ...

கா:- அதென்ன, உமக்கு அங்கேயும் செல்வாக்கு இருக்கா....?

குு:- அய்யாவிடம் பக்குவமாகச் சொல்லி ஏற்பாடு செய்கிறேன்....

கா:- அய்யாவுக்குச் சரியானபடி சொல்லு....உன்னைக்கேட்பார்...' அல்லவா?

குு:- வேறே? யாரைக்கேட்டு காரியம் நடக்கிறது....இந்த ஆறு வருஷமா.....

★

---

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

நிர்வாகி




தம்பி,

புராணமதிபடைத்த ஓர் மன்னன்—மந்தகாச வாழ்வால் மதியை மங்கவைத்துக்கொண்ட மந்திரிமார்கள்—அந்தச் சபைக்கு வந்தான் ஒருசாகசக்காரன்! "அரசே!" என்றான், "என்ன?" என்று தர்பார் முறையில் கேட்டான் மன்னன்!

"அரசே! நான் எத்தனையோ இராஜாதிராஜாக்களைப்பார்த்தேன் அவர்களோடு பழகினேன்—ஆனால் ஒருவருக்காவது, தங்களுக்கு உள்ளது போன்ற வீரதீரம், பராக்கிரமம் இல்லை, எனவே தங்களைக் கண்டதும், அது தங்களுக்கே உரியது என்று தீர்மானித்துவிட்டேன், என் காணிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன், காவலா!" என்றான். காவலன், "காணிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி ஒருவன் கேட்பது கண்டு மகிழ்ந்து, அங்ஙனமே ஆகுக! காணிக்கைப் பொருள் யாது?" என்று கேட்டான்.

"ஈரேழுபதினாலு உலகத்திலும் இதற்கு ஈடு கிடையாது வேந்தே"

"அப்படியா! மெத்தப் புகழ்கிறாயே! என்ன அது! நவரத்தின மாலையோ—முத்துப் பல்லக்கோ—தந்தக் கட்டிலோ, தங்கப் பாளமோ......"

"மன்னா! இதெல்லாம் சாமான்ய மன்னர்களுக்கு! தங்களுக்கு நான் தரப்போவது......"

"என்ன! என்ன அது!"

"இந்திராணி தேவியாரின் எழில் மிக்க சேலை—தங்கள் பட்ட மகிஷி பூரிப்படைய!"

"இந்திராணி தேவியார்...?"

"ஆமாம் அரசர்க்கரசே! தேவேந்திரனுடைய பார்யாள், சாட்சாத் இந்திராணிதேவி, தவமிருந்து பெற்ற சேலை, அதை அணிந்து கொண்டால், அரசே! வெள்ளை யானைகூப்பிட்டகுரலுக்கு ஓடிவரும் கற்பக விருட்சம், காமதேனு, குற்றேவல் புரியும் — அப்படிப்பட்ட மகிமை வாய்ந்தது......"

"அப்படியா........ நம்பமுடியவில்லையே......"

"இப்போது நம்பவேண்டாம் மகாராஜா! சேலையை நான் இந்தச் சபையிலே, பிரித்துக்காட்டப் போகிறேனே, அப்போது நம்புங்கள்—இப்போது ஏன்! ஏழை பேச்சு அம்பலம் ஏறுமா!!"

"தேவேந்திரனுடைய தேவியின் சேலை......"

"தங்கள் திருச் சபையில் கொண்டு வந்து காட்டப்போகிறேன்......"

"யார்? நீ?"

"உரு கண்டு எள்ளற்க, மன்னா! உண்மையைப் பொறுத்திருந்து பாரும்"

"எப்போது கொண்டுவருவாய்?"

"ஆறேழு மண்டலம் பூஜை — அது முடிந்ததும் அந்த அற்புதமான சேலை......"

இந்த உரையாடலுக்குப் பிறகு, சாகசக்காரனுக்கு, அரண்மனையில் சகல வசதிகளும் செய்து தரப்பட்டன. பூஜை நடத்தி வந்தான்! மலர்களைவிடப் பழங்கள் அதிகம் செலவாயின, பூஜைக்கு!! தேனும் பாலும் குடம் குடமாக! தேவ பூஜைக்குத் துணைசெய்ய தத்தைகள்!! பொன், கேட்கும் போதெல்லாம். இப்படிப் போக போக்கியமாக சாகசக்காரன் இருந்துவந்தான்—ஆறு மண்டலம் முடிந்தது, ஏழும் வந்து சென்றது — மன்னன் இன்னும் ஏன் தாமதம் என்றான்; "மன்னா! பூஜை முடியவில்லையே, ஆறேழு மண்டலமாகும் என்றேனே மறந்தீரா?" என்றான் சாகசக்காரன், "நான் எப்படி மறப்பேன், நேற்றோடு ஏழு மண்டலம், இருநூற்று எண்பது நாட்கள் முடிந்தனவே" என்றான் மன்னன்; பெருஞ்சிரிப்பொலி கிளம்பிற்று, "மன்னா! ஆறேழு மண்டலம் என்றேன்—தாங்கள் அதன் தாத்பரியத்தைத் தெரிந்துகொள்ளவில்லை—ஆறேழு—நாற்பத்திரண்டு — நாற்பத்திரண்டு மண்டலங்கள் — நாற்பத்திரண்டு நாற்பது நாட்கள் — என்று விளக்கமுரைத்தான்—மன்னன் திடுக்கிட்டுப்போனான்—இனியும் என்ன செய்வது—இந்திராணியின் சேலை—அதன் மகிமையால், வெள்ளை யானை, காமதேனு, கற்பக விருட்சம்!! சரி!—என்றான்—சாகசக்காரன் இராஜபோகத்தில் மூழ்கினான்நாட்கள் நகர்ந்தன-கடைசியில் அவன் சொன்ன நாள் வந்தது "நாளை, தர்பாரில்!" என்று சாகசக்காரன் தவயோகி பாணியில் சொன்னான்,

மன்றம் கூடிற்று — மன்னன் ஆவல் நிரம்பிய கண்களுடன்!!

சாகசக்காரன், உள்ளே நுழைந்தான்—ஓம்! என்றான் மும்முறை! மேலே பார்த்தான், கரத்தை உயர்த்தினான், ஆஹா! என்றான், கண்களில் ஒத்திக்கொண்டான், எழுச்சிமயமான நிலைபெற்றவன் போலாகி, "என்னை நம்ப மறந்தீர்களே காவலனே! இதோ பாரும்! வானவில் இதனிடம் என்ன செய்யும்—? ஆஹா! பார்த்துக்கொண்டே யுகக் கணக்கில் இருந்துவிடலாம் போலிருக்கிறதே! என்ன பளப்பளப்பு! எத்தகைய ஜொலிப்பு! தொட்டால் வெண்

ணெய் மீது கைபடுவது போலிருக்கிறதே” என்று பேசலானான் — மன்னன் திகைத்தான்—மந்திரிகள் மருண்டனர்—ஏனெனில், சாகசக்காரன் வெறுங்கையுடன்தான் தெரிகிறான்!

‘இந்திராணியின் சேலை......... எங்கே......” என்று மன்னன் இழுத்தாற்போலக் கேட்டான்.

“இதோ மன்னவா! என்னுடைய சித்து முறைக்கு மெச்சிச் சிவனார் அருளிய வரத்தின் விளைவு—வண்ணச் சேலை—இதோ — இதோ—” என்று கூறியபடி சேலையைப் பிரித்துக் காட்டுவதுபோலப் பாவனை செய்தான்!

“எனக்குத் தெரியவில்லையே...” என்று ஏக்கத்துடன் கூறினான் மன்னன்.

“திகைத்தவன் போலானான் சாகசக்காரன்—பயந்த குரலில்—“மன்னா! தங்களுக்குத் தெரியவில்லை என்றா கூறுகிறீர்கள்......” என்றான்......ஆமாம் தெரியக் காணோமே...என்றான் மன்னன்... ஐயகோ! ஒரு விஷயத்தைக் கூற மறந்தேன், அறிவிலிநான்! அரசே! யாருடைய அன்னை பத்தினியோ, அப்படிப்பட்டவர்களின் கண்களுக்குத்தான் இது தெரியும் —உத்தமியாயிற்றே உமது அன்னை—உமக்குத் தெரிந்தாக வேண்டுமே” என்றான் — மன்னனுடைய மாதாவின் மீது மாசு உண்டு—மன்னனுக்கும் அது தெரியும்—எனவே, குட்டு வெளிப்பட்டுவிட்டதே என்று குமுறி, “ஆஹா! அற்புதம்! அற்புதம்! இதல்லவா தேவப்பிரசாதம்!” என்று கூறியபடி, சாகசக்காரன் கையிலிருந்து சேலையை வாங்கினான், (பாவனைதான்!) மந்திரிகளிடம் காட்டினான், அவர்களோ, மன்னனுக்கு ஒத்து ஊதினர்! சாகசக்காரன் வெற்றிபெற்றான்,

*

திட்டங்கள் தீட்டும் காங்கிர சாட்சியினர், இதுபோலவே ‘இந்திராணிசேலை’ காட்டுகிறார்கள் தம்பி, தெரியவில்லையே என்றால், உனக்குத் தேசபக்தி இல்லை, அதனால்தான் தெரியவில்லை என்கிறார்கள். நமக்கேன் இந்த வீண்பழி என்று பயந்து பலபேர், தங்களைத் தேச பக்தர்கள் என்று காட்டிக் கொள்வதற்காகவே, “தெரிகிறது! தெரிகிறது!” என்று குதூகலம் காட்டிப் பேசுகிறார்கள். பரிதாபமாகத்தான் இருக்கிறது.

ஆகஸ்ட்டு தீ பற்றிய சிந்தனையில், நீயும் இருந்தாய் நானும் இருந்தேன்—ஆகையால், உனக்கு, முன்பே இதைக் கூறமுடியாமல் போய்விட்டது.

காங்கிரஸ் தீட்டும் திட்டங்கள், எவ்வளவு அவலட்சணமாக இருக்கிறது என்பதைப்பத்துப்பதினைந்து நாட்களுக்கு முன்பு ஒரு சம்பவம் காட்டிற்று.

சர்க்காருடைய ‘மேற்பார்வை’ பெற்று, நிதி உதவிபெற்று, தொழில்களின் பராமரிப்புக்கும் வளர்ச்சிக்கும் ஒரு அமைப்பு இருக்கிறது.

தொழில் துறை நிதிக் கார்ப்பரேஷன்.

திட்டம் அருமையானது வரவேற்கத்தக்கது.

வளர்ச்சி பெறக்கூடிய ஒரு தொழில், அதற்குத் தேவையான முதல்—பணம்— கிடைக்காததால், குன்றிப்போகக் கூடாது, சர்க்கார் அதற்கு நிதி அளித்து, அதனைக் காப்பாற்றவேண்டும் என்பது திட்டத்தின் நோக்கம்.

தம்பி, தாய்ப்பால் குடிக்கிறது குழந்தை! எதுவரையில்? வேறு உணவுகளை உண்டு, ஜீரணித்துக் கொள்ளும் ‘பக்குவம்’ பெறுகிற வரையில்.

தொழில் துறைக்குச் சர்க்கார் அளிக்கும் உதவியும், அதைப் பெறும் தொழிலமைப்பு, வளரும் பக்குவத்தைப் பெறுவதற்காகத்தான்.

இந்த நல்ல திட்டம் எவ்வளவு இலட்சணமாக நடைபெற்றிருக்கிறது, தெரியுமா? டில்லி சட்டசபையில், சரமாரியாகக் கண்டனக் கணைகள்! காங்கிரசின் எதிரிகள் தொடுத்தது அல்ல, காங்கிரஸ் உறுப்பினர்களே கணைவிட்டுத் துளைத்தனர்.

ஊழல், திறமைக் குறைவு, நெளிகிறது!

நாற்றமடிக்கும் அளவுக்கு நிர்வாகம் மோசமாக இருந்திருக்கிறது.

ஒரு கண்ணாடித் தொழிற்சாலை — வடக்கே—சோடேபூர் என்ற ஊரில்! இது, திட்டத்தின்படி உதவி நிதி கேட்டது.

சர்க்காருக்கு, இப்படிப்பட்ட திட்டங்களுக்காகப் பணம் இருக்கிறது —நெற்றி வியர்வைதான் அது!

ஏழையின் குருதி எவ்வளவு அக்ரமமாகப் பாழாக்கப்பட்டிருக்கிறது, என்பதைக் கேள் தம்பி, நாம் எப்படிப்பட்ட ஆட்சியிலே சிக்கிக்கொண்டிருக்கிறோம் என்பது தெரியும். தேசியம் பேசி, நம்மிடம் பகை காட்டும் காங்கிரஸ் நண்பர்களையும், இதைப்பார்த்து, சிந்தித்து, கருத்தளிக்கச் சொல்.

சோடேபூர்க் கண்ணாடித்தொழிற்சாலைக்கு 21-இலட்ச ரூபாய் தந்திருக்கிறார்கள் — பல தவணைகளில்.

21-இலட்சத்தையும் வாங்கிச் சாப்பிட்டு ஏப்பம் விட்டான பிறகு, துளியும் அச்சமின்றி, யார் நம்மை என்ன செய்ய முடியும் என்ற துணிவுடன், அந்தத் தொழிற்சாலையைக், குன்றவைத்து, அதற்குப் போட்டியாக இருந்த வேறோர் கண்ணாடித் தொழிற்சாலைக்கு, மிகக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டார்கள்!!

அக்ரமத்தின் தன்மை தெரிகிறதா! பசுவுக்குப் பருத்தியும் புல்லும் வைக்கப் பணம் தருகிறான் ஒரு தர்மதாதா!

பசுவுக்கு அது தரப்பட்டால், மதுரமான பால் கிடைக்கும் என்று எண்ணுகிறான் உதவி அளித்தவன்.

அதற்காகத்தான் உதவி, “நல்ல தரமான பசு; நல்லபடி தீனி வைத்தால், கொழுத்து வளரும், தீஞ்சுவைப்பால் அளிக்கும்” அதற்காகச் செலவிடப் பணம் எங்களிடம் இல்லை, என்று கூறித்தான் ‘தர்மம்’ கேட்டுப் பெற்றனர்.

பசுவோ, எலும்புந்தோலுமாகி விடுகிறது.

பிறகு அதனை, ‘கசாப்பு’ கடைக்

.....

## ஏழை-பணக்காரன்

—[]—

கேள்வி:- ஏழை எதை வெறுக்கிறான்? பணக்காரன் எதைவிரும்புகிறான்?

பதில்:- ஏழை பணக்காரனை வெறுக்கிறான். பணக்காரன் ஏழையை விரும்புகிறான். ஏழை இருந்தால் தானே அவன் எளியகூலிக்கு வேலை வாங்கலாம். எனவே அவன் ஏழையை விரும்புகிறான்.

—சுதந்திரன்.

காரருக்கு மலிவான விலைக்கு விற்றுவிடுகிறார்கள்.

எத்தன்! கடினசித்தன்! பொது மக்கள் துரோகி என்றெல்லாம், நீ கண்டிக்கத் துடிப்பாய். தம்பி, நீயும் நானும் என்ன, டில்லி சட்ட சபையில்,

சுசேதா கிருபளானி
சோதிராம் கித்வானி
தாகூர்தாஸ் பார்க்கவா
மோகன்லால் சாக்சேனா
துளசிதாஸ் கிசன்சந்து
எச். வி. காமத்
எஸ். என். தாஸ்
டி. என். சிங்-

இப்படிப்பட்டவர்கள் இடித்துரைத்தார்கள்.

இவ்வளவுக்கும் குகா எனும் மந்திரி, அமைதியாக, "அதுசரி! என்னசெய்யலாம்! அவ்வளவு மோசம் இல்லை! ஊழல் ஏற்பட்டு விட்டது! கவனக்குறைவால் வந்த கேடு! அதைப் பெரிதுபடுத்தாதீர்கள்! போனது போகட்டும்!"-என்று இந்த முறையில்தான் பேசியிருக்கிறார்.

ஜனநாயகம், தக்கமுறையில் தழைத்து, ஒரு பலம் பொருந்திய எதிர்க்கட்சி இருந்திருக்குமானால், குகாவும் அவருடைய கூட்டுத் தோழர்களும், வெட்கித் தலைகுனிவது மட்டுமல்ல, மிரண்டு பணிந்திருப்பார்கள்.

ஆனால் இப்போதுதான் எல்லாம் காங்கிரஸ்மயம்; காங்கிரசுக்கோ நேரு அபயம், என்று நிலைமை இருக்கிறதே!

கண்டிக்கிறார்கள்! புள்ளிவிவரம் காட்டுகிறார்கள்!

பசுவோ சாகடிக்கப் பட்டு விட்டது! பாபிகளா இப்படியும் அக்ரமம் செய்யலாமா? யார் இந்தத் தீய காரியம்செய்தவர்கள், பிடித்திழுத்து வாருங்கள் விசாரணை செய்து தண்டிப்போம், என்று பேசுகிறார்கள்.

ஆனால் அந்த ஆசாமியோ, சர்க்காரிடம் சன்மானம், விருது, சான்று பெற்று, வேறு இடம் தேடிச்சென்றிருக்கிறார்.

பொறுப்பற்றவர்கள், பொது மக்களிடம் துளியும் அச்சமில்லாதவர்கள், தட்டிக்கேட்க யார் இருக்கிறார்கள் என்று எண்ணும் நெஞ்சழுத்தக்காரர்கள் என்றெல்லாம் சொல்லும்போது கோபம் கொதித்தெழுகிறது காங்கிரஸ் கட்சியினருக்கு ஆனால் சோடேபூர் சம்பவத்துக்கு அவர்கள் என்ன சமாதானம் கூறுகிறார்கள்!

இலட்சக் கணக்கில் கோடிக் கணக்கில் பணம் பாழாகிறது.

பகற் கொள்ளைக்காரனுவீது, போலீஸ் தாக்குமோ, ஊரார் ஒன்று திரண்டு வந்து எதிர்ப்பரோ, என்று அஞ்சி அஞ்சிக் காரியம் செய்ய வேண்டி இருக்கிறது. ஏமாளித்தனம் அரச பீடத்தில் இருப்பது கண்டு, எத்தர்கள், ஒரு சிரமமுமின்றி, துளியும் நடுக்கமின்றி, அடிக்கிறார்கள் கொள்ளை. ஆகுமா? என்று கேட்டாலோ, "இதோ ஆசியாவின் ஜோதியின் ரஷிய விஜயம், படம் பார், பத்தாயிரம் அடி, கலர்," என்று கூறி, இந்த 'அபின்' போதும் மக்களை மயக்க என்று எண்ணுகிறார்கள். முறையும் சரியல்ல, நீண்ட காலத்துக்குப் பலன்தரத்தக்கதுமல்ல.

*

"பாராளுமன்றத்தில் தொழிலுதவி நிதிக் குழுவின் நிருவாகத்தைப் பற்றி நடந்த வாதம் சில முக்கியமான கருத்துக்களை வற்புறுத்தியுள்ளது. அவை நிருவாகத்தின் ஒழுங்கீன விவரங்களை வெளியிட்டதோடுகூட இந்திய அரசாங்கம் அவற்றைக் குறித்துத் தக்க நடவடிக்கை எடுக்கவில்லையென்றும், நிருவாகத்தை ஆராய்ச்சி செய்த விசாரணைக் குழுவின் ஆலோசனைகளுக்கும் மதிப்புக் கொடுக்கவில்லையென்றும் குறிப்பிடுகின்றன.

*

நிதிக்குழுவின் நிருவாக ஒழுங்கீனங்களை, கணக்குத் தணிக்கையாளர்கள் விளக்கிக் கூறியிருந்தும், அரசாங்கம் யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

*

எடுத்துக்காட்டாக சோடேபூர் கண்ணாடித் தொழிற்சாலைக்கு ரூ. 2,000,000 சிறு தொகைகளாக 21 தவணைகளில் கொடுக்கப்பட்டது. சோடேபூர் தொழிற்சாலை நிருவாகம் வேண்டுமென்றே ஒழுங்கீனமாக நடத்தப்பட்டதென்றும், அதனால் பெரு நட்டம் ஏற்பட்டதாகக் காட்டப்பட்டதென்றும், பின்னர் அதனுடைய போட்டித் தொழிற்சாலை அதிபருக்கு மிகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டதென்றும், விசாரணைக் குழுவின் முன்னர் சான்று கூறப்பட்டது. இவ்வளவு ஊழல்களுக்கும் காரணமாயிருந்த நிருவாக ஆணையாளருக்கு, அவருடைய ஒப்பந்த காலம் முடிந்த பிறகு ஆறுமாத ஊதியத் தொகையை இலவசமாக அளித்து, அவருக்கு ஒரு நற்சான்று பாராட்டுரையும் அரசினர் வழங்கியிருக்கிறார்கள்! பொதுமக்கள் நிதி இங்ஙனம் மோசடி செய்யப்பட்டதற்கு அரசாங்கமும் உடந்தையாயிருந்ததாகத் தான் கொள்ள வேண்டுமென்று, பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற காங்கிரசுக் கட்சித் தலைவர், பண்டித் தாகூர் தாசு பார்க்கவா, சுட்டிக்காட்டியிருக்கிறார்.

*

உத்தரப்பிரதேசக் காங்கிரசுக்குத் தலைவர் திரு. மோகன்லால் சாக்சேனா, காந்தி நினைவு நிதியிலிருந்து ரூ. 1,65,00,000 தொழிலுதவி நிதியில் முதலீடாக வைக்கப்பட்டதென்றும், ஏழை மக்களிடமிருந்து சிறிது சிறிதாகச் சேகரிக்கப்பட்ட இத்தொகை ஒழுங்கீனமான முறையில் விரையமாக்கப் பட்டிருக்கிறதென்றும் கூறியிருக்கிறார்.

*

அரசாங்கத்தின் நேரடியான மேற்பார்வையிலிருந்த நிதியே இக்கதியை அடைந்திருக்கிறதென்றால் பொது மக்கள் யாரை நம்ப முடியும்?"

*

*'தமிழ்நாடு' தலையங்கத்தில் உள்ள கருமுத்துக்கள் இவை!*

*'தமிழ்நாடு' பாரதமாதாவின் முரசு அல்ல; அது அப்படித்தான் எழுதும் என்று கூறித்தப்பித்துக் கொள்ள வெட்கத்தால் வேதனைப் படும் காங்கிரசார் முயல்வர், தம்பி, அவர்களுக்கு இதோ, இவைகளைக் காட்டு,*

"கார்ப்பொரேஷன் 1948-ம் ஆண்டு முதல் வேலை செய்து வருகிறது.

*

ஆரம்பமானது முதல் இதுவரை சுமார் ரூ 21 கோடி கடன் தரப்பட்டுள்ளது.

*

ஆனால் எவ்வளவு தூரம் கடன் உதவிபெற்ற ஸ்தாபனங்கள் வேருன்றியுள்ளன என்பதைத் தெரிவித்து கொள்வதற்கான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. இதற்கிடையே இந்த ஸ்தாபனம் வேலைசெய்யும் விதத்தைப் பற்றிப் புகார்கள் கிளம்பி ஸ்ரீமதி கிருபளானி தலைமையில் ஒரு விசாரணைக் கமிட்டியை சர்க்கார் நியமித்ததும், அதன் யாததஸ்து இரண்டு ஆண்டு

---

**1954-55ல் தபால் இலாக்காவில் 6இலட்ச ரூபாய்க்குமேல் மோசடி செய்யப்பட்டது 870 அதிகாரிகள் இதில் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள்.**

—ஜகஜீவன்ராம், ஆக-2

களுக்கு முன் வெளியானதும் வாசகர்கள் அறிந்ததே.

*

அதன் நிர்வாக டைரெக்டர் தம்மிஷ்டப்படி நடந்துகொள்ள முடிந்தது என்பது பொதுப் படையான புகார்.

*

இதுவரை இருந்து வந்த ஏற்பாட்டின் கீழ் டைரெக்டர்கள் தமக்கு வேண்டியவர்களுக்குச் சலுகை காண்பித்து அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகப் பல மெம்பர்கள் புகார் செய்தனர்.

*

ஒரு கண்ணாடித் தொழிற்சாலைக்கு ரூ 21 லக்ஷம் கொடுத்தும் அது வேலை செய்யாமல் நின்று போய்விட்டது.

*

உத்தரவாதப்படி டிவிடெண்டுதருவதற்காகச் சென்ற ஆண்டில் ரூ. 4 லக்ஷத்துக்குமேல் சர்க்கார் தம் கையைவிட்டுத் தரவேண்டியதாயிற்று. இம்மாதிரி கார்ப்பரேஷன் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை இந்தவகையில் சர்க்கார் நஷ்டப்பட்ட தொகை ரூ 31 லக்ஷம். இவையெல்லாம் திருப்திகரமான நிர்வாகத்தின் அறிகுறிகளல்ல.

*

இது சர்க்கார் பொறுப்பேற்று நடத்திவைக்கும் ஸ்தாபனம், 14 டைரெக்டர்களில் சர்க்கார் நேரடியாகவும் ரிசர்வ் பாங்கு மூலமாகவும் 6 பேரை நியமிக்கிறார்கள். இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனங்கள் கூட்டுறவு பாங்குகள் முதலியவை மற்றவர்களை நியமிக்கின்றன. எல்லோரும் பெரிய ஆசாமிகள். கடன் தருவதோ அயனான சொத்தின் ஆதாரத்தின் மீது. அதன் மதிப்பில் 60% அளவுக்குத்தான். இந்த ஸ்தாபனம் சரிவர நடைபெறாமல் சர்க்கார் வருஷா வருஷம் பையை அவிழ்க்க வேண்டியிருக்கிறது என்றால், கடன் தரும் விஷயமாக வேறு துறைகளில்சர்க்கார் பரவலாக செயல்படுவதற்கு முன் எவ்வளவு சிந்தனையும் ஜாக்கிரதையும் அவசியம் என்பதைச்சொல்லத் தேவையில்லை''

*'தினமணி' கக்கிடும் தீச்சுடர்கள் இவை!!*

*எப்படி இருக்கிறது காங்கிரசாட்சியிலே உள்ள நிர்வாக இலட்சணம்.*

**ஜீப்கார் ஊழல்**

**டிராக்டர் ஊழல்**

**உரபேர ஊழல்**

**ரெடிமேட் வீடு ஊழல்**

**இலண்டன் மாளிகை ஊழல்**

*தம்பி, எந்தச்சர்க்காரும் வெட்கப் படக்கூடிய அளவு இருக்கிறது— வளர்ந்தும் வருகிறது. சர்க்கார், துணிந்து யாராவது இத்தகைய ஊழல்களை எடுத்துக் காட்டிக் கண்டித்தால், மூடி மறைக்கவும், மிரட்டி அடக்கவும், நேருவைக் காட்டி மயக்கவும்தான் முயலுகிறதே தவிர, இத்தகைய ஊழல்களை ஒழித்துக்கட்டத் துணிவும் கொள்ளவில்லை, அத்தகைய தூய எண்ணம் இருப்பதாகத் தெரியவும்காணோம்.*

*நேரு பண்டிதருக்கோ இவைகளெல்லாம் கடுகு!*

*அவருடைய கண்ணோட்டம், உலக சமாதானத்தின்மீது, ஆழப் பதிந்து விட்டதாம்.*

*இங்கே, நிர்வாகத்தில் ஊழல் நெளிகிறது; பொதுமக்களின் பணம் விழலுக்குப் பாய்கிறது; ஜனநாயகம் கேலிக் கூத்தாக்கப் படுகிறது.*

*21 இலட்ச ரூபாயைச் சோடேபூர் கண்ணாடித் தொழிற்சாலைக்குக் கொட்டி அழுத இந்த அமைப்பு இதுவரையில், 21 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது—தொழில்களின் வளர்ச்சிக்கு!!*

*என்னென்ன வளர்ந்ததோ! யார் கூறமுடியும்!!*

*இந்த ஊழல்களில் நூற்றில் ஒரு பங்கு நடைபெற்றால் கூட, தம்பி, மற்ற மற்ற ஜனநாயகநாடுகளில், மந்திரிசபைகள் கவிழும், மக்கள் சீறிஎழுவர்,!! சீனா போன்ற நாடுகளிலே, ஊழலுக்குக் காரணமாக இருந்தவர்கள் சுட்டுத்தள்ளப் படுவார்கள்.*

*இங்கே, சோடேபூர் கண்ணாடித் தொழிற்சாலை நிர்வாகிக்கு, அவருடைய பதவிக்காலம் முடிந்த பிறகு மேற்கொண்டு ஆறுமாதச் சம்பளம் கொடுத்து, அவருடைய அருமை பெருமையைப் பாராட்டி நற்சாட்சிப்பத்திரமும் கொடுத்து அனுப்பினார்களாம்!!*

*இந்த வெட்கக்கேட்டுக்கு, என்ன கூறுகிறார்கள், காங்கிரசார்!!*

*அன்பன்,*

**அண்ணாத்துரை.**

(-3ம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பார்க்கிலும் மிகவும் அதிகமாகவே வரிசெலுத்துகிறார்கள்!!'' என்பதாக. இருந்தும் டில்லி இப்படிச் சொல்லுகிறது? — என்று சொல்லவில்லையே தவிர, அந்தப் பொருள் தொனிக்க அறிவிக்கிறார், அமைச்சர். எட்டாண்டுக் காலத்திலே கொடி கட்டிப் பறக்கிறது எமது ஆட்சி என்று குதூகலிக்கும் தேசிய நண்பர்களைப் பார்த்துக் கேட்கிறோம்! இதெற்கென்னபதில் சொல்வீர்!! பீகாரிலே பிணங்கள் எட்டு; டில்லியிலே கோவணாண்டிகள் ஊர்வலம்; சென்னையின் முகத்திலே பட்டைநாமம்; ஆனால் ஐதராபாத்திலோ, புது நிலையம், ராஷ்டிரபதி வசிக்க. இதுதான் டில்லி! எட்டு ஆண்டுகளில் இவர்களது ஆட்சியில் 'நாடென' அவர்கள் கூறும் இந்தியத் துணைகண்டமும் அதில் அடங்கியிருக்கும் நாமும் பெற்றுவரும் முன்னேற்றம்!!

வேட்டுச் சப்தம் அடங்கவில்லை! உரிமைகோருவோரைச்சிறையில் பூட்டும் கொடுமையும் குறையவில்லை—அமிருதசரசிலே, பஞ்சாப் வீரர் தாராசிங், 4-மாதச் சிறைவாசமும் 400-ரூபாய் அபராதமும் விதித்து, சிறைக்குள்ளே மூடப்பட்டிருக்கிறார். சுதந்திர நாளுக்கு முதல் தினம்தான், இச் சம்பவம்! சர்க்காரிலே பணியாற்றுவோரின் பரிதாப நிலையோ, கொஞ்சம்கூட அடங்கவில்லை. வீணாகும் பண விரயமோ, நிறுத்தப்படவில்லை! வேண்டுகோள் விட்டாலும், உறுமிக் கேட்டாலும், சட்டசபைப் பிரதிநிதிகள் சங்கநாதம் செய்தாலும் மாகாணசர்க்கார் 'காவடி' கட்டிச் சென்றாலும், 'நாமம்' சாத்துவதும் நடைபெறத் தவறுவதில்லை! இந்த லட்சணத்தில் காங்கிரசே கட்சியாம்—கவலைபோக்கச் செய்யுமாம். கர்ச்சிக்கிறார்கள் நண்பர்கள்! கவலை தான்அதிகமாகிறது நமக்கு!!

## வருந்துகிறோம்

*நமது நண்பரும் கழகத்தோழருமான பொன்மலை ஜி. பராங்குசம் அவர்களின் அருமைத்தந்தையார் திரு. குருசாமி அவர்கள் ஆகஸ்ட் 11-ந்தேதி இரவு இயற்கைஎய்திய செய்திகேட்டுமிகவும்வருந்துகிறோம்*

*தந்தையை இழந்த பராங்குசம் அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.*

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு ''திராவிட நாடு'' அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.